# பேராயர் சபாபதி குலேந்திரன்

(வரலாற்றுச் சுருக்கம்)

# Life of Bishop Kulandran



ஆக்கியோன்

வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன்

முதல்வர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயர் சபாபதி குலேந்திரன்

(வரலாற்றுச் சுருக்கம்)

ஆக்கியோன் :

வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
முதல்வர் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

அச்சிட்டோர் :

ஆர்னோல்ட்ஸ் இன்டர்நெஷனல் பிரிண்டிங் ஹவுஸ்
(பிரைவேட்) லிமிடெட்.
கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: தென்னிந்திய திருச்சபை
யாழ்ப்பாணத் திரு மண்டலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்வாங்கு வாழ்ந்தவர் ... ... ... ... | 1 |
| ஆரம்பக் கல்வி ... ... ... ... ... | 5 |
| இடை நிலைக்கல்வி ... ... ... ... | 10 |
| உயர் கல்வி ... ... ... ... ... | 19 |
| மத குரு ... ... ... ... ... | 27 |
| இல்லறம் ... ... ... ... ... | 35 |
| பேராயர் ... ... ... ... ... | 40 |
| நூலாசிரியன் ... ... ... ... ... | 47 |
| பெரும் பிரிவு ... ... ... ... ... | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

பேராயர் சபாதி குலேந்திரன் ''அமெரிக்க இலங்கை மிஷனின் 175 வருடகால சேவையில் விளைந்த மிகச் சிறந்த முத்து'' என்று போற்றப்பட்டவர். தமது வாழ்க்கையினாலும் பேச்சாலும் எழுத்தாலும் சமுதாயப்பணியினாலும் இறைவனுக்கும் மக்களுக்கும் அருந் தொண்டாற்றினார். தூய்மைவாதியாக இருப்பதனையே தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு விளங்கினார்.

பேராயர் அவர்கள் 1991 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ம் திகதி தமது 91 வது வயதில் இவ்வுலக வாழ்வினை நீத்தார். அவருடைய வாழ்வின் பிற்காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகிய யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. கலாநிதி எஸ் ஜெபநேசன், அவரின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக எழுதியுள்ளார். தமிழில் எழுதப்பட்டுள்ள இந்நூல் குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பேராயரின் இளமைக் கால நினைவுகள் நேர்முக உரையாடல் ஆதாரம் கொண்டு நன்றாக எழுதப்பட்டுள்ளன. இனி ஆங்கிலத்திலும் வேறுமொழிகளிலும் பேராயரின் வாழ்க்கை வரலாறு விரிவாக எழுதப்படும் என்பது எனது நம்பிக்கை. இந்த நூல் விரிவான ஆராய்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

வண. கலாநிதி ஜெபநேசனின் முயற்சி பராட்டுதற்குரியது. பலவித வேலைகளின் மத்தியில், பேராயர் சபாபதி குலேந்திரன் மீது கொண்டிருந்த அபிமானத்தால் இந்த நூலை எழுதிமுடித்துள்ளார். ''ஒரு இனத்தின் வரலாறு அவ்வினத்தின் பெரியாரின் வாழ்க்கை வரலாறே'' என்பது ஒரு அறிஞனின் கூற்று. தமிழ்மக்கள் தங்கள் பெரியாரில் ஒருவரின் வாழ்க்கையைப் படித்துப் பலனடைவார்கள் என்பது என் நம்பிக்கை. இந்நூல் ஆக்கியோனுக்கும் தமிழ் உலகம் கடமைப்பட்டுள்ளது.

**D. J. அம்பலவாணர்**

பேராயர்
தென்னிந்திய திருச்சபை யாழ் மறை மாவட்டம்

வட்டுக்கோட்டை
31-07-92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்

''வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதில் மக்கட் சாதியிலேயே தனிநாயகனாக விளங்கியவர். அவரின் அசாதாரண ஆற்றலை யாவது பல்வேறுபட்ட ஆக்கங்களையாவது சீர்தூக்கிப் பார்த் தால், வெகு சிலரால் மட்டுமே அவரின் சாதனைகளை எட்ட முடியும். அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது கடின மானது. என்னைப் பொறுத்தவரை மாபெரும் உழைப்பை உள் ளடக்கியது'' ஜேம்ஸ் பொஸ்வல்.

To write the life of him, who excelled all mankind in writing the lives, and who whether we consider his extraordinary endowments or his various works has been equalled by few in any age is an ardous and may be reckoned in me a presumptuous task."

— **James Boswell**

பேராயர் குலேந்திரன் இந்த நூற்றாண்டிலே தென்னாசியாவில் வாழ்ந்த தலைசிறந்த கிறிஸ்தவ சிந்தனையாளர்களில் ஒருவர். தமது பேச்சாலும் எழுத்தாலும் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ சமு தாயத்துக்கு ஒரு தெளிவான பாதையைக் காட்டியவர். தென் னிந்திய திருச்சபை யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் முத லாவது பேராயராக அமர்ந்து அந்த மறை மாவட்டத்தின் இறையியலையும் சமூகப் பணிகளையும் 23 வருடங்கள் நெறிப் படுத்தியவர்.

பேராயர் குலேந்திரனோடு பழகவும் அவருடைய இறையியலைக் கற்கவும் இறைவன் எனக்கு வாய்ப்பளித்தார். ஏறத்தாள நாற் பது வருடங்களாக அன்னாரின் சிந்தனைகளினால் வளர்ச்சியுற்ற யான் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றினை எழுத விரும்பினேன். பேராயர் டி. ஜே. அம்பலவாணர் எனக்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

1990 ம் ஆண்டு ஜுன் மாதம் இலங்கையில் ஆரம்பமான உள்நாட்டுப் போர் எம்மை வீட்டை விட்டு வெளியேற முடியாத நிலையில் வைத்தது. ஏனைய கல்லூரிகளைப் போல யாழ்ப்பாணக் கல்லூரியும் மூடப்பட்டது. இக்கால கட்டம் பேராயர் குலேந் திரனோடு, அவருடைய வாழ்க்கையைப் பற்றி அளவளாவவும், வரலாற்றை வடித்தெடுக்கவும் போதிய அவகாசம் அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 ம் ஆண்டு செப்ரெம்பர் 23 ம் திகதி பேராயரின் 90 வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அந்த நாளிலே இந்த நூல் வெளிவர வேண்டுமென இந்த வேலை ஆரம்பமானது. ஆனால் நாட்டின் நிலைபரங்கள் சீர்குலைந்து இருந்ததினால் அப்பொழுது இந்த நூலை அச்சுவாகனம் ஏற்ற முடியவில்லை.

நுண்ணறிவும் கடின உழைப்பும் கொண்ட பேராயரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதுவது சுலபமான காரியமன்று. டாக்டர் சாமுவேல் ஜோன்சனின் வாழ்க்கை வரலாற்றினையெழுத முயன்ற ஜேம்ஸ் பொஸ்வலின் உள்ளத்தில் ஏற்பட்ட தயக்கமே என்னுள்ளத்திலும் ஏற்பட்டது. எனினும் பேராயர் குலேந்திரனின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது நல்ல பணி என நினைத்து இந்த முயற்சியில் ஈடுபட்டேன். இது ஓர் ஆரம்ப முயற்சி. வேறு பலர் பேராயரின் வாழ்க்கையையும் பணியையும் பல்வேறு கோணத்தில் நின்று ஆராய்வார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

பேராயர் குலேந்திரன் பலருக்கு ஆத்ம சகாயராக விளங்கினார்.

> ''தெய்வ நல்லருள் படைத்த அன்பரோடு கூடவும்
> நல்லருள் கூர்வையே''

என்பது தாயுமான சுவாமிகள் கூற்று. பேராயர் குலேந்திரனோடு கூடி வாழும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்திருக்க முடியாது. இந் நூல் ஓரளவிற்காவது அவர் பெருமைகளை அறியவும் அவருடைய சிந்தனைகளைக் கற்கவும் துணை புரியும் என்று நம்புகின்றேன். இந்த நூலை எழுதுதற்குப் பேராயர் அவர்களே முக்கியமான குறிப்புகளைத் தந்து உதவினார். அன்னாரின் சிந்தனைகளை அறிந்து கொள்ள அவர் எழுதிய இருபதிற்கும் மேற்பட்ட நூல்கள் வழி காட்டின. பேராயரின் பெரும்பாலான நண்பர்களும் சமகாலத்தவர்களும் இவ்வுலக வாழ்வை நீத்து விட்டனர். சிலர் பிற நாடுகளுக்குச் சென்று வாழ்ந்து வருகின்றனர்.

தமிழிலே எழுதப்படும் இந்த நூலை வாசிக்கப்போகிறவர்கள் இன்றைய இலங்கையின் இளைய தலைமுறையினரே. நமக்குள்ளே, குலேந்திரன் என்றொரு மாமனிதன் வாழ்ந்ததும் எண்ணிலடங்கா எழுத்துக்கள் எழுதியதும் நினைவில் என்றும் நிறுத்தப்பட வேண்டியவை. இளைய தலைமுறையினர் பேராயர் குலேந்திரனின் பெருமைகளை உணர்ந்து கொண்டால், இந்நூலின் நோக்கம் நிறைவேறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடவுளோடு சஞ்சரித்தவர்

திருமறையிலே ஏனேக்கு என்பார் கடவுளோடு சஞ்சரித்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேராயர் குலேந்திரன் இடைவிடாது, சீவிய காலமெல்லாம் கடவுளுடைய பிரசன்னத்தை உணர்ந்து அதற்கமைய வாழ்ந்தவர். (constantly and continually in the presence of God) வாழ்க்கையின் இறுதிக்கட்டம் வரைக்கும் தமது பற்றுறுதியில் எந்தவிதமான அசைவாட்டமோ, மாற்றமோ கொள்ளாது வாழ்ந்து காட்டியவர்.

### கல்வியே கருந்தனம்

பொன்னைப் பொருளைத் தேடாமல் கல்வியாகிய உயர் செல்வத்தை வாழ்க்கையிற் தேடியவர் குலேந்திரன். நூல்களே அவர் தமது பிள்ளைகளுக்குத் தேடி வைத்த செல்வமாகும். செல்வந்தர்களையன்றிக் கல்விமான்களையே அவர் மதித்தார். கண் பார்வை குன்றும் வரை ஆராய்ச்சி செய்தார். நூல்களை எழுதினர். தவருன கட்டுரைகளுக்கு மறுப்பெழுதினர். பார்வை மங்கிய பொழுது பிறரைக் கொண்டு நூல்களை வாசிக்கச் செய்தார், நூல்களையும் கட்டுரைகளையும் பிறர் எழுதும்படி கூறினர்.

### இல்லறத்தில் துறவு

பேராயர் குலேந்திரன் இல்லறமே நல்லறமெனக் கொண்டு இல்லறத்திற் புகுந்தார். ஆனல் அவர் மனம் துறவு ஒழுக்கத்தையே நாடியது. ஐம்புலன்களையும் தமது அறிவினலும் இறை பக்தியினலும் அடக்கியாண்டார். உணவு, உடை, வதிவிடம் என்னும் விஷயங்களில் மிகுந்த எளிமையைக் கடைப்பிடித்தார். நூலாராய்ச்சியும், கடவுள் தியானமுமே அவருடைய உள்ளத்திற்கு குதூகலம் அளித்தன. மதுவும் மங்கையும் பாலியப் பிராயத்திற் கூட என்னை மயக்கவில்லை என்று கூறியுள்ளார்.

### பன்முகப் பார்வை

பேராயர் குலேந்திரன் ஒரு திருச்சபையின் தலைவராகவிருந்த பொழுதும் அவருடைய பணி திருச்சபைக்குள் அடங்கிவிடவில்லை. அரசியலில் மிகுந்த ஆர்வமுடையவராகவிருந்து, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினர். அரசியற் கட்சிகளிடையில் சமரசப் பணி மேற்கொண்டார். தமிழ் மக்களின் பிரச்சினையை உலக மக்கள் அறிந்து கொள்ளத் தம்மால் இயன்ற துணை புரிந்தார். அரசியற் கட்டுரைகளையும் வரலாற்றுக் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார். கல்லூரிகளையும் வைத்தியசாலைகளையும் பேரூக்கத்துடன் நடத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவை நாவலன்

பேராயர் உள்ளத்தில் எப்பொழுதும் குதூகல உணர்ச்சி குடி புகுந்திருந்தது. எப்பொழுதும் மற்றவர்கள் சிரிக்கும்படியாக ஏதாவது கதை கூறுவார். இக்கதைகள் பெரும்பாலும் சகபாடிகள் நண்பர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளாக இருக்கும். நூற்றுக்கணக்கான நகைச்சுவைக் கதைகளை அவர் மனதில் வைத்திருந்தார். அவரோடு ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தால் நமது கவலைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்ற பவுல் முனிவரின் வாக்கிற்கு இலக்கணமாகப் பேராயர் வாழ்ந்தார்.

## உடம்பை ஓம்புதல்

பேராயர் குலேந்திரன் நீண்ட காலம் எவ்வித நோயுமின்றி வாழ்ந்து வந்தார். இவரைத் தென்னிந்திய திருச்சபை யாழ் மறை மாவட்டத்தின் பீஷ்மர் என்று குறிப்பிடலாம். ஆனுல் இத்தகைய ஆரோக்கிய வாழ்வினை அவர் சுலபமாகப் பெற்று விடவில்லை. காலைதோறும் உடற்பயிற்சி, மாலைதோறும் நடைப் பயிற்சி உடலுக்கேற்ற ஆகாரம், காலையில் போதியளவு தண்ணீர் அருந்துதல், மனதிற் கவலைகளை வளர்த்துக் கொள்ளாமை போன்ற செயல்களாற் பேணி வந்தார். ஆரோக்கியம், நோய்கள் சிகிச்சை போன்ற துறைகளில் பல்வேறு நூல்களை வாசித்து ஒரு வைத்தியருக்குத் தேவையான அறிவைப் பெற்றிருந்தார். உடல் இறைவனுல் வழங்கப்பட்டது. அதனைப் பேணுதல் எம் கடன் என்பது அவர் கொள்கை.

பேராயரின் வாழ்க்கை நமக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டி. “வாழ்க்கை என்பது ஒரு கலை. அதில் தேறுதல் கடமை, வாழத் தெரிந்தவர்களாக இருப்பதே சமுதாயத்திற்கு நாம் செய்யும் பெரிய தொண்டு” என்ருர் மு. வரதராசன். பேராயர் குலேந்திரனின் வாழ்க்கை பெரிய தொண்டாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வி

இப்பொழுது யாழ்ப்பாணம் மிகப் பேரெடுப்புள்ள நாடு. அதில் இங்கிலீஷர், ஒல்லாந்தர் முதலிய பரதேசிகளின்றிச் சயதேசிகளாகிய தமிழர் வாசம் பண்ணுகிறார்கள். இங்கே சில காலங்களுக்கு முன் பஞ்ச இலக்கணக் கடலைக் குடித்து முழங்கும் இலக்கண மேகங்களும், காப்பியக் கடல்களைப் பருகித் தேக்கிட்டேப்பமிடுமிலக்கியக் கவிகளான மேகங்களும் வட்டமிட்டுத் திரிந்தாற் போலத் தற்காலத்திலும் அவைகள் உலாவுகின்றன.

(—ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை
சாதாரண இதிகாசம்)

பேராயர் குலேந்திரனின் தந்தை வழி முன்னோர்கள் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாயைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தென்னிந்தியாவுடன் மர வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்கள். அத்தொழிலுக்கு அல்வாயை விட வரணி என்ற கிராமம் அதிக வசதிகளை அளித்தமையினால் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் வரணியில் வந்து குடியேறினார்கள். வரணி தென்மராட்சியின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு கிராமம். பச்சை வயல்களும் தோட்ட நிலங்களும் பனந்தோப்புக்களும் நிறைந்த அழகுமிக்க இக்கிராமம், வடக்கு, மேற்கு, இடைக்குறிச்சி என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தமிழ் மன்னர்கள் காலத்திலிருந்தே சரித்திர முக்கியத்துவம் மிகுந்த இக்கிராமம், போர்த்துகீசர்களின் ஆவணங்களிலும், ஒல்லாந்தரின் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வண்ணார்பண்ணைக்கு அடுத்ததாகச் சனத்தொகையிலும் வருவாய் ஈட்டலிலும் முன்னிலையில் நின்ற பெருமையுடையது.

சென்ற நூற்றாண்டில் அடிக்கடி தலைவிரித்தாடிய வாந்திபேதி (Cholera) நோயினால் யாழ்ப்பாண மக்கள் பெருவாரியாக மரணமடைய நேரிட்டது. இத்தகைய பயங்கர நோயின் பீடிப்பு, யாழ்ப்பாணத்தின் மேற்குப்புறப் பகுதிகளிலும் பார்க்கத் தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியது. வரணிக் கிராமத்தின் இடைக்குறிச்சியையும் 1886 ம் ஆண்டு வாந்திபேதி மோசமாகத் தாக்கியது. அதன் காரணமாகப் பேராயர் குலேந்திரனின் பேரன் சின்னத்தம்பி குடும்பத்தில், சபாபதிப்பிள்ளை எனப்பட்ட ஒரு மகனைத் தவிர மற்றய அனைவரும் இறந்தனர். திரு. சபாபதிப்பிள்ளை (பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சபாபதியெனத் தம் பெயரைச் சுருக்கிக் கொண்டார்) பராயமடைந்த பின்பு மானிப்பாய்க்குச் சென்று அங்கே அன்னம்மா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தை நல்லறமாக நடத்திக் கொண்டு வந்தார். அன்னம்மா மானிப்பாயிலே மிஷனரிமாருக்குச் சொந்தமாகவிருந்த ஆதனங்களின் செயலாளராகவிருந்த இராமு என்பவரின் மகள்.

இந்தத் தம்பதியினருக்கு மூன்று ஆண் மக்களும் ஐந்து பெண் மக்களும் பிறந்தனர். அவர்களின் தலைப்பிள்ளையாகப் பிறந்த ஐசக் குலரத்தினம் என்பவர் பத்து மாதங்கள் மட்டும் உயிர் வாழ்ந்து விட்டுத் திடீரென ஏற்பட்ட வலிப்பு நோயின் மிகுதியினால் மரணமடைந்தார். இரண்டாவதாக 1898 ம் ஆண்டில் சாமுவேல் அரியரத்தினம் என்னும் மகன் பிறந்தார். இவரே பின்னர் பிரபல வழக்கறிஞராகி யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது மேயராகப் பணியாற்றும் பேறு பெற்றவர். 1900 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 23 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை குலேந்திரன் அவர்கள் இக் குடும்பத்தில் தோன்றினர். இவர்களை விட வேறு ஐந்து பெண் பிள்ளைகளும் இக்குடும்பத்திலேயே பிறந்தார்கள். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:—

(1) அரியம்மா (2) ஞானம்மா (3) மனோன்மணி (4) சந்திரப் பிரபை (5) சோபிதம்மா.

சபாபதிப்பிள்ளை அவர்கள் தமது இடைவிடாத ஊக்கமுள்ள உழைப்பினாலும் தாம் பெற்ற கல்விச் சிறப்பினாலும் உயர்ந்த வருவாய் தரக்கூடிய பிரசித்த நொத்தாரிசு என்ற பதவியை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இவரை ஊர் மக்கள் ''நொத்தாரிசு சபாபதி'' என்றழைத்தனர். நொத்தாரிசின் குடும்பம் மானிப்பாயில் இருந்தாலும், அவர் தமது தொழிலை வரணிக் கிராமத்திலே நடாத்தி வந்தார். இக்கால கட்டத்தில் அரசாங்கம் ஓலைச் சுவடியாக இருந்த அனைத்து ஆவணங்களும் மற்றும் உறுதிகளும் காகிதத்திலே எழுதப்பட வேண்டுமென ஆணை பிறப்பித்தது. எனவே நொத்தாரிசு சபாபதி தன் கீழ் மூன்று லிகிதர்களை வேலைக்கு அமர்த்தி ஓலைச் சுவடிகளைக் காகிதமயப் படுத்தும் பணியில் ஈடுபடுத்தினர்.

---

(1) திருமதி கார்த்திகேசு (2) திருமதி அரியரத்தினம் (3) திருமதி சிதம்பரப்பிள்ளை (4) திருமதி அல்பிரட் தர்மராஜா (5) திருமதி ஐசக் அருளம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொத்தாரிசு சபாபதி சிறந்த வருமானமுள்ள தொழிலில் இருந்தமையால் இல்லறம் எவ்வித குறைபாடுகளுமின்றி நடைபெற்று வந்தது. இவர் முதலில் ஒரு ஒற்றைத் திருக்கல் வண்டியை சொந்தமாக வைத்திருந்தார். பின்னர் 2 மாடுகளைக் கொண்ட வண்டியை வாங்கியிருந்தார். இக் காலக்கட்டத்திலே மானிப்பாயில் சாமுவேல் கணக்கர் என்பவர் குதிரை வண்டி ஒன்றினை வைத்திருந்தார். பெண் பிள்ளைகளை உடுவிலுக்கு அனுப்பவும் ஆண் பிள்ளைகளைப் பட்டினத்துக்கு அனுப்பவும் மாட்டு வண்டியே பயன்படுத்தப்பட்டு வந்தது.

பேராயர் 1906 ம் ஆண்டு மானிப்பாயிலிருந்த அமெரிக்க மிஷன் தமிழ் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். இப்பள்ளிக்கூடம் இப்போதுள்ள மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை வளவின் கிழக்கு மூலையில் அமைந்திருந்தது. அரசாங்கம் வருடந்தோறும் பரிசோதகர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி மாணவர்களை பரிசோதித்து வகுப்பேற்றம் அளித்தது. ஆசிரியர்களின் வேதனம் மாணவர்களின் சித்தியிலே தங்கியிருந்தது. பேராயரின் முதலாவது வகுப்பில் அராலி வடக்கைச் சேர்ந்த ஜி. டி. தம்பாப்பிள்ளை என்பவர் பரிசோதகராக வந்தார். இரண்டாம் வகுப்பினை மல்லாகத்தைச் சேர்ந்த ஏ. பொன்னையா அவர்கள் பரிசோதித்தார். இத் தமிழ் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராகப் பேராயரின் மாமியாரே பணியாற்றி வந்தார். இரண்டாம் வகுப்பு ஆசிரியராக இருந்தவரும் பேராயரின் இன்னொரு மாமியாரே ஆகும். நெடுங்காலமாக இரண்டாம் வகுப்பிற்குப் பொறுப்பாக இருந்த இந்த அம்மையாரைச் சகலரும் ''பொன்னக்கா'' என்றே அழைத்தனர். பொன்னக்கா பின்னர் ''பாலியர் நேசன்'' என்ற பத்திரிகையை நடாத்தி இலக்கிய சேவை செய்த திரு. வில்லியம் சின்னத்தம்பி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

பேராயர் மூன்றும் வகுப்பில் படித்த காலத்தில் திரு. டி. எஸ். தில்லைநாயகம், பீ.ஏ. அவர்கள் பரிசோதகராக வந்திருந்தார். திரு. தில்லைநாயகம் அவர்கள் பரீட்சையின் போது பேராயரைப் புத்தகத்திலிருந்த ஒரு பாடத்தைச் சொந்த நடையில் ஒப்புவிக்குமாறு கேட்டார். ஞாபகசக்தி மிகுந்த பேராயர் அந்தப் பாடத்தை நூல் நடையிலேயே ஒப்பித்து விட்டார். பேராயர் இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது 1906 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் நியுமோனியா என்னும் சளி, சுரத்தினுல் கடுமையாகத் தாக்கப்பட்டார். நோய்வாய்ப்பட்டிருந்த இவரைப் பார்க்க ஒரு புதுமணத் தம்பதியினர் வந்திருந்தனர். அவர்கள் யாரெனில் பேராயரின் மாமனுராகிய வில்லியம் ஜோன்ஸ் என்பவரும் அவருடைய மனைவியாருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர். அப்பொழுது சிறுவனாக இருந்த பேராயர் தமக்கு யாரோ ஒருவர் அன்பளிப்பாகக் கொடுத்த ஒரு ரூபா பணத்தை திருமணப் பரிசாகப் புதுமணத் தம்பதியினருக்கு வழங்கினார். இது அவருடைய மாமனாரையும் மாமியாரையும் பெரிதும் கவர்ந்தது.

பேராயர் சளிச் சுரத்தினால் பீடிக்கப்பட்டு மானிப்பாய் வைத்தியசாலையில் இருந்த கால கட்டத்தில் பிரபல நாவலாசிரியரான லெனார்ட் வூல்ஃப் (Leonard Wolf) என்பவரும், நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு, மானிப்பாய் வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்றார். இவரை மானிப்பாய் வைத்தியசாலை அதிபராயிருந்த டாக்டர் டி. பி. ஸ்கொட் அவர்களும் ஏனைய ஊழியர்களும் மிகுந்த பாசத்துடன் பராமரித்தனர். ஆனால் லெனட் வூல்ஃப் தமது நூல்களிலே டாக்டர் டி. பி. ஸ்கொட் அவர்களைப் பற்றி மேலெழுந்தவாரியான குறிப்புகளையே வழங்கியுள்ளார். இது பேராயருக்கு மிகுந்த வேதனையை அளித்த ஒரு விடயமாகும்.

தமிழ்ப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை படித்த குலேந்திரன் அக்கால வழக்கத்தின்படியே ஆங்கிலப் பாடசாலைக்குப் படிக்கச் சென்றார். மானிப்பாயில் அமெரிக்க மிஷனரிமார் அமைத்த ஆங்கிலப் பாடசாலை மானிப்பாய் வைத்தியசாலை வளவுள் தென் மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. மெமோரியல் பாடசாலை என்று அழைக்கப்பட்ட இந்த ஆங்கிலப் பாடசாலையின் தலைமையாசிரியராகத் திரு. ஸ்கடர் மாணிக்கவாசகர் என்பவர் பணியாற்றிவந்தார்.

இவர் கடமையில் கண்ணாக இருந்த ஒழுக்கச் சீலர். இக்கால கட்டத்தில் மெமோரியல் பாடசாலையின் முதலாம் தரத்திற்குச் சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு. செல்லையா என்பவர் ஆசிரியராக இருந்தார். இவர் ஆசிரிய இலக்கணம் பொருந்தப் பெற்ற பண்பாளராகத் திகழ்ந்தார். மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் இரண்டாம் தரத்திற்கு மோசஸ் முருகேசு என்பவர் ஆசிரியராகவிருந்தார். முறுக்கிய மீசையுடனும் நெடிய பிரம்புடனும் காட்சியளித்த இப் பயங்கர உருவத்தைக் கண்ட மாணவர்கள் நடு நடுங்கி நின்றனர். இவர் மறைந்து போன ஆசிரிய தலைமுறையின் சிறந்த எடுத்துக் காட்டு. ''அடியைப்போல அண்ணன் தம்பி உதவாது'' என்பதனை மோசஸ் முருகேசு தமது போதனையாலும் சாதனையாலும் நிரூபித்துக் காட்டினார். மூன்றாம் தர நாட்களை நினைத்தால் பேராயர் குலேந்திரனுக்குப் பிற்காலத்திலும் சிம்ப சொப்பனமாக இருந்தது. நாலாந்தர ஆசிரியராகப் பேராயரின் மாமனார் திரு. வில்லியம் ஜோன் என்பவரும், ஐந்தாம்தர ஆசிரியராகச் சங்கானையைச் சேர்ந்த திரு. சின்னையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் பணியாற்றி வந்தார்கள். ஆறுந் தரத்தில் பல்வேறு ஆசிரியர்கள் வந்து கற்பித்தனர். இவர்களிலே ஆங்கில ஆசிரியராக விருந்த ஜே. சி. ஸ்டிக்னி என்பார் கண்ணியமிக்க பண்பாளர். தலைமையாசிரியராக இருந்த மாணிக்கவாசகர் பேராயருக்குப் பாடம் போதிக்கவில்லையெனினும் தமது நடை உடை பாவனை கனிஞல் பேராயர் குலேந்திரனின் பாலிய உள்ளத்தில் குடி கொண்டிருந்தார். ஆறும் வகுப்பிற்குப் படிப்பித்த திரு. முத்துத் தம்பி எந்தப் பாடத்தையும் லாவகமாகச் சமாளிப்பார்.

பேராயரின் தாய் அன்னம்மா மிகுந்த கண்டிப்பு மிகுந்தவர். பேராயர் சிறுவஞகவிருந்த பொழுது அவர் படிப்பில் முன்னேற வேண்டும் என்ற நோக்குடன் அவருக்கு அதிகம் பிரம்படி கொடுப்பார். பேராயருக்குப் பன்னிரண்டு வயதாகவிருந்த பொழுது கணித பாடத்தில் 08 புள்ளிகள் எடுத்த காரணத்திற் காகத் தாயார் தமக்கு அடித்த அடிகளை நினைத்தால் தமக்கு இப்பொழுதும் நடுங்குகின்றது என்று அவர் கூறியுள்ளார்.

மானிப்பாயில் துள்ளித் திரிந்த பராயத்தில் அவருக்கு நண்பர் களாகச் சோமசுந்தரம் அவர்களும் ஹன்டி பேரின்பநாயகம் அவர் களும் வந்து வாய்த்தனர். ஹன்டி பேரின்பநாயகம் இறுதிவரை பேராயரின் நண்பராகவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். குலேந்திரனின் இளமைக் காலத்தில் பணியாற்றிய போதகர்மா ரில் வண. வில்லியம் ஜோசப் அவர்களே அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தார். மானிப்பாய் வைத்தியசாலையிற் பணியாற்றிய டாக்டர் ரி. பீ. ஸ்கொட் ஆற்றல் மிக்கவர். ஆஞல் ஆற்றலுக்குத் தக்கபடி அவர் மனம் விசாலமடைந்திருக்கவில்லையென்பது பேராயரின் கருத்து. ''நெஞ்சிலிட்ட கோலமெல்லாம் அழிவ தில்லை—எண்ணங்களும் மறைவதில்லை'' என்ற கூற்றுப்படி குலேந்திரனின் இளமையுள்ளத்தில் குடி கொண்ட கோலங்க ளெல்லாம் இறுதி வரை அழியாமலே இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைக்கல்வி

பேராயரின் ஆரம்ப ஆங்கிலக்கல்வி மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் ஆறு வருடம் நடைபெற்றது. நொத்தாரிசு சபாபதி தமது மக்கள் தொடர்ந்து ஆங்கிலக் கல்வி பெறும் முகமாக அவர்களை ஓர் ஆங்கில உயர் நிலைப் பள்ளிக்கு அனுப்ப விழைந் தனர். இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப் பாணக் கல்லூரி, பரி யோவான் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி என்பன முக்கியமான மிஷன் ஆங்கிலப் பாடசாலைகளாகத் திகழ்ந் தன. உயர்நிலைப் பள்ளிகள் பெரும்பாலும் (Senior Cambridge) என்ற வகுப்பு வரை கல்வி போதித்துக் கொண்டிருந்தன. மானிப் பாயில் இருந்த அமெரிக்க மிஷனரிமாருக்கும் வட்டுக்கொட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்த அமெரிக்க மிஷனரிமாருக்கு மிடையே மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் சிறிது கருத்து வேறுபாடுகள் இருந்தனவாகத் தெரிகிறது. மானிப்பாயிலிருந்த மாணவர்கள் பலரும் எப்படியோ பரி யோவான் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தனர். மானிப்பாயிலிருந்த அமெரிக்க மிஷன் தாபனங்களிற் பணியாற்றிய ஊழியர்கள் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். நொத்தாரிஸ் சபா பதியின் மூத்த புதல்வரான சாமுவேல் அரியரத்தினம் 1911 ம் ஆண்டு பரி. யோவான் கல்லூரியிற் சேர்க்கப்பட்டார். கனிஷ்ட புதல்வரான பேராயர் 1913 ம் ஆண்டு சேர்க்கப்பட்டார்.

பரி யோவான் கல்லூரியில் அப்போது அதிபராக இருந்தவர் வண. ஜேக்கப் தொம்சன் என்னும் ஆங்கிலேயராவர். துணை அதிபராக திரு. ரீ. ஏச். குரொசட் பணியாற்றி வந்தார். இவர் சிறந்த நிர்வாகி. மாணவர்களுக்குப் பிரம்படி கொடுப்பதி லும் ஈடு இணையற்று திகழ்ந்தார். இவரே பரி. யோவான் கல்லூரியின் வரலாற்று ஆசிரியர். டபிள்யூ. சி. வோல்ட்டன் ஆங்கில ஆசிரியராகவும், எஸ். எஸ். சோமசுந்தரம் (பின்னர் கனேன்) கணித ஆசிரியராகவும் பணியாற்றி வந்தனர்.

பேராயர் Second Form என அழைக்கப்பட்ட ஆருந் தரத்தில் சேர்ந்து கொண்டார். இவ் வகுப்புக்கு ஆசிரியராக இருந்தவர் திரு. ஏ. ஜே. சார்ள்ஸ் என்ற போர்த்துக்கேய வம்சாவளிப் பறங்கியர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த உயர்ந்த மனிதர். தமது நீண்ட நெடிய கல்வி வரலாற்றிலே சார்ள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைப்போல ஓர் ஆசிரியரைத் தாம் கண்டதில்லையென்று பேராயர் குறிப்பிட்டுள்ளார். இளமை உள்ளத்தில் எத்தனையோ ஆசிரியர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் சார்ள்சைப்போல எல்லாராலும் உள்ளத்தில் நிலைத்து நிற்க முடியவில்லையே என்பது பேராயர் குலேந்திரனின் ஏக்கம். அடுத்த வகுப்பில் அதாவது Third Form இல் சார்ள்சுக்கு முற்றிலும் எதிர் மாறான பண்புடைய ஒருவர் வகுப்பாசிரியராக வந்து சேர்ந்தார். ''தாரமும் குருவும் தலைவிதிப்படி''யென்று அடிக்கடி நொந்து கொண்டார். இந்த ஆசிரியரைக் காண்பதரிது. இவருடைய போதனை முறை மட்ட ரகமானது. வகுப்பிற்குள் நுழைந்ததும் பாடப் புத்தகத்தை மாணவர்களைக் கொண்டு வாசிக்கச் செய்வதே இவருடைய போதனை முறையாக விருந்தது. இலத்தீன் மொழியைக் கற்பித்த இந்த ஆசிரியரின் பாட நேரத்தில் மாணவர்கள் தாராளமாகப் பார்த்து எழுதினார்கள். அதனை அவர் கண்டு கொள்ளாமல் இருந்தார்.

பேராயர் ஜுனியர் கேம்பிரிச் வகுப்பிற் படித்துக் கொண்ருந்தபொழுது அதிபர் ஜேக்கப் தொம்சன் அனைத்து மாணவர்களையும் யாழ்ப்பாணக் கோட்டையைப் பார்க்கும்படி அழைத்துச் சென்றிருந்தார். அந்தச் சுற்றுலா முடிந்த பின்னர் அதிபர் அவர்கள் வகுப்பில் இருந்த அனைவரையும் யாழ்ப்பாணக் கோட்டையைப் பற்றி ஒரு கட்டுரை வரையும்படி கூறினார். பேராயரின் கட்டுரை அதிபருக்கு மிகவும் பிடித்து விட்டது. அதிபர் பேராயரை Senior Cambridge வகுப்பிற்கு அழைத்துச் சென்று அதனை அந்த வகுப்பு மாணவர்கள் முன்னிலையில் வாசிக்கும்படி சொன்னார். பேராயரின் தமையனாரும் அந்த வகுப்பில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு முறை அதிபர் வகுப்பில் இருந்தவர்களைப் பார்த்து LAURELS பெறுவதால் என்ன பயன்? என்றார். LAURELS என்பது விருதுகளைக் குறிக்கும். பேராயர் விடை பகர்ந்தார். ''வர்த்தக ரீதியாகப் பார்த்தால் பயன் ஒன்றுமில்லை'' (Commercially nothing) என்றார். அதிபருக்கு விடை நன்றாகப் பிடித்துக் கொண்டது. இப்படிப்பட்ட விடைகளையே யான் விரும்புகின்றேன் என்றார் அதிபர். ஒரு கட்டத்தில் பேராயரின் வகுப்பிற்கும், அவர் தமையனாரின் வகுப்பிற்கும் ஒன்றாக வைத்தே அதிபர் ஜேக்கப் தொம்சன் வகுப்புக்களை நடாத்தி வந்தார். மாணவர்களுக்கு அமெரிக்க சுதந்திரப் போர் என்னும் பொருளில் கட்டுரை எழுதுவது வீட்டு வேலையாகக் கொடுக்கப் பட்டிருந்தது. பேராயர் கட்டுரையை எழுதாமல் வகுப்பிற்குச் சென்று விட்டார். ஆசிரியர் கேட்ட பொழுது எழுதிவிட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரவில்லையென்றார். பேராயர் விடுதிக்கு அனுப்பப்பட்டார். வகுப்பிற்குப் பிந்தி வந்துகொண்டிருந்த அண்ணன் அரியரத்தினத் திடம் தனது இக்கட்டான நிலையைக் கூறினார். அண்ணன் தான் எழுதிய கட்டுரையை அப்படியே பேராயரிடம் கொடுத்துவிட்டு வகுப்பிற்கு வந்தார். அதிபர் பேராயரை வாசிக்கும்படி கூறினார். பேராயர் அண்ணனின் கட்டுரையை அழகாக வாசித்தார். பின்னர் அண்ணன் கட்டுரை வாசிக்க வேண்டிய வேளை வந்தது. அவர் தயங்கவில்லை. தனது பயிற்சிப் புத்தகமொன்றை எடுத்து எழுதியதனை வாசிப்பது போல பாசாங்கு செய்து வசனங்களை எடுத்துரைத்தார். பேராயர் வாசித்த கட்டுரைக்கு முற்றிலும் வேறுபட்ட பாணியில் வேறுபட்ட சொற்களில் கட்டுரையை வாசித்தார். ''அண்ணனின் பெருமையே பெருமை'' என்று மெய் சிலிர்த்து நின்றார் பேராயர். பேராயர் Junior Cambridge வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது தனது மனம் கணிதத்தில் நாட்டம் கொள்ளவில்லையெனக் கண்டு கொண்டார். குறிப்பாக அட்சரக் கணிதத்தில் ஆற்றல் மிகக் குறைவு என்பதை உணர்ந்து கொண்டார்.

Junior Cambridge பரீட்சையில் சித்தியடைய மூன்று பாடங்களில் தேர்ச்சி அடைவது அவசியமாக இருந்தது. பேராயர் ஆங்கிலம், வரலாறு, வேதப்பாடம் என்பதனைத் தேர்ந்து கொண்டார். வேதப்பாடம் அரைப்பாடமாகக் கருதப்பட்டது. இன்னொரு அரைப்பாடமாகக் கேத்திர கணிதத்தை எடுத்துக் கொண்டார். இவ்விரண்டும் சேர்ந்து ஒரு முழுப் பாடமாயிற்று.

இக்காலகட்டத்தில் பரி. யோவான் கல்லூரியில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் மிகச் சிறந்த முறையில் அரங்கேற்றப்பட்டன. 1915 இல் வெனிஸ் வணிகன் (The Merchant of Venice) என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகத்தில் வணிகனாகப் பேராயரின் சகோதரர் சாம் ஏ. சபாபதி நடித்தார். சைலொக் என்ற பாத்திரத்தை டபிள்யூ. ஏ. வோல்டன் என்பவர் ஏற்று மிகத் திறம்பட நடித்தார். அப்பொழுது திரு. வோல்ட்டனின் நடிப்பைப் பற்றியே யாழ் மக்கள் பேசி மகிழ்ந்தனர். போர்ஷியா என்ற பாத்திரத்தை ஆர். ஆர். குறெசெற் தம்பிராஜா ஏற்றிருந்தார். அவருடைய இளைய சகோதரன் மசியோனு என்ற பாத்திரத்தை ஏற்று நடித்தார். பரி. யோவான் கல்லூரியில் Tempest என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டது., இந்த நாடகத்தில் திரு. டபிள்யூ. ஏ. வோல்டன், புரொஸ்பெரோ என்ற பாத்திரத்தை ஏற்றிருந்தார். என். எஸ். பீட்டர்சன், கலிபன் என்ற பாத்திரத்தை ஏற்றிருந்தார். இந்த நாடகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த ஆங்கிலேயத் திருச்சபையின் கொழும்பு பேராயராக இருந்த திரு. ஈ. ஏ. கொபல்ஸ்டன் வாயடைத்துப் போனர்.

பேராயரின் பரி. யோவான் நாட்கள் மிகுந்த இன்பமான சூழலில் கழிந்தன. இலண்டன் மெட்ரிகுலேசன் பரீட்சை வந்த பின்னர் Senior Cambridge பரீட்சையின் பெருமை, ஓரளவிற்குக் குன்றிப் போய் இருந்தது. இலண்டன் மெற்றி குலேசன் பரீட்சையில் சித்தியடைந்த காரணத்திற்காக அவருடைய தமையனுருக்குத் தகப்பன் நொத்தாரிசு சபாபதி ஒரு புதிய துவிச்சக்கர வண்டியை வாங்கிக் கொடுத்தார். இதனைப் பேராயர் யாழ்ப்பாணத்து பொலிஸ் மைதானத்தில் ஓடிப் பழகினுர். பேராயரின் அண்ணனுகிய சாம். ஏ. சபாபதி பரி. யோவான் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டியின் தலைவனுகவும், சிரேஷ்ட மாணவத் தலைவனுகவும் விளங்கினுர்.

ஒருமுறை சாம் ஏ சபாபதி தலைமையின் கீழ் விளையாடிய உதை பந்தாட்டக் கோஷ்டி புனித பத்திரிசியார் கல்லூரியைத் தோற்கடித்தது. இது பேராயருக்கு மிகுந்த பெருமை அளித்தது.

பரி. யோவான் கல்லூரியில் பெரும்பாலான நேரத்தை ஆங்கில இலக்கியங்களை வாசிப்பதிலேயே செலவிட்டார். அவருக்கு 18 ம் நூற்றுண்டுப் புலவர்களில் பெருமளவு ஈடுபாடு இருந்து. 1916ம் ஆண்டு 8 வருடமாகத் துணை அதிபராக இருந்த திரு. ரீ. ஏச். குரொசட் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அதிபராகப் பணியாற்றச் சென்றுர். சிறந்த வரலாற்று ஆசிரியர் இவ்வாறு தம்மைப் பிரிந்தது பேராயருக்கு மிகுந்த வேதனையை அளித்தது. கனம் எஸ். எஸ். சோமசுந்தரம் தொடர்ந்து கணித ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். கணித ஆசிரியர்கள் எல்லோரும் பேராயருக்குத் தாம் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு அதி சூரர்களாகவே விளங்கினுர்கள். கணிதத்தில் காணப்பட்ட குறைபாட்டுக்குப் பிரதியீடாக ஆங்கிலத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு படித்தார். ஒரு முறை வசன கவிதையில் ஓர் ஆங்கில நாடகத்தையும் எழுதினுர்.

பரி. யோவான் கல்லூரியினர் ஒரு முறை யாழ் இந்துக் கல்லூரியுடன் உதைப்பந்தாட்டப் போட்டிக்கு ஆயத்தமாயினர். அதிபர் வண. ஜே தோம்சனின் குதிரைக்காரனின் மகனும் இந்தப்பரி. யோவான் உதைப்பந்தாட்டக் கோஷ்டியில் இருந்தான். அவன் தாழ்த்தப்பட்ட வகுப்பினனுக இருந்தபடியால் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களும் பெற்றேரும் அவன் விளையாடுவதை எதிர்த்தார்கள். அதனுல் அந்த வருடம் இந்த உதைப்பந்தாட்டம் நடைபெருமல் முடிவுற்றது. விளையாட்டு மைதானத்தில் குழப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் முன்னர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மைதானத்திற்கு வந்து crowd disperse என்று கூறினர். அத்துடன் கூட்டம் கலைந்தது.

1918 ம் ஆண்டு முதலாவது உலக யுத்தம் முடிவிற்கு வந்தது. பரி. யோவான் கல்லூரி அதிபர் வண. ஜேக்கப் தொம்சனின் மகன் Horace Thompson இப்போரில் உயிர் நீத்தார். இவர் இராணுவ சேவையில் ஈடுபடுமுன்னர் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருத பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

1919 ம் ஆண்டு இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர். வில்லியம் மென்னிங் பரி. யோவான் கல்லூரிக்கு வந்து Horace Thompson உடைய இராணுவச் சிலுவையைத் தகப்பனுருக்கு அணிவித்தார். தகப்பனுர் உணர்ச்சி பொங்க நின்முராயினும் மன உறுதியை இறுதிவரை இழந்து விடவில்லை. 1919ம் ஆண்டு யாழ்ப்பாணம் கடும் மழையினுல் பெரும் அழிவுற்றது. இதனுடைய காட்சிகள் இப்பொழுதும் தமக்கு ஞாபகமாக இருக்கின்றன என்று பேராயர் கூறியுள்ளார். பேராயரின் ஆற்றல்களை நன்கறிந்திருந்தும் அதிபர் வண. ஜேக்கப் தோம்சன் அவர்கள் அவருக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் அளிக்கவில்லை. எந்தவித பதவியையும் எக்கட்டத்திலும் அவர் வழங்கவில்லை. இது பேராயருக்கு மிகுந்த மன வேதனையை உண்டாக்கிற்று. தம்மைப் பற்றி ஒரு தவறுன சந்தேகத்தை அவர் கொண்டிருந்தார் என்முர் குலேந்திரன்.

1919 ம் ஆண்டு வண. Kenneth Mc. Pherson பரி. யோவான் கல்லூரியின் அதிபரானுர். இவர் பேராயரின் ஆற்றலை நன்கறிந்து அவருக்கு வேண்டிய முக்கியத்துவத்தை அளித்தார். மாணவர் தலைவன் என்ற பதவி அவருக்கு வழங்கப்பட்டது. உதைபந்தாட்டக் கோஷ்டியில் இடம் பெற்று centre half என்ற முக்கியமான இடத்தில் விளையாடினுர். 10.10.1919 அன்று யாழ் மத்தியக் கல்லூரியில் இக்கட்டான கட்டத்தில் உத்வேகத்துடன் பந்தை உதைத்துத் தள்ளிப் பார்வையாளரைப் பரவசப் படுத்தினுர்.

அதிபர் Mc. Pherson பேராயரை வீட்டுக்கு அழைத்து தேநீர் வழங்கி அவருடன் பல விஷயங்கள் குறித்து உரையாடினுர். Mc. Pherson அங்கு வருமுன்னர் கண்டித் திருத்துவக் கல்லூரியில் பணியாற்றி வந்தார். அங்கு இருந்த சில நல்ல சம்பிரதாயங்களைப் பரி. யோவான் கல்லூரியிலும் புகுத்தினுர். குறிப்பாகச் சமூக சேவைப் பணியில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஆரம்பிக்கப்பட்ட சமூக சேவை அணி குருநகருக்குச் சென்று பலவிதமான சுகாதார பணிகளில் ஈடுபட்டது.

சமூக சேவை அணிக்கு நிதி சேர்க்குமுகமாக 1919 ம் ஆண்டு சம்பந்த முதலியார் எழுதிய மனோகரா என்ற நாடகம் அரங் கேற்றப்பட்டது. திரு. ஏ. எஸ். ஆபிரகாம் என்பவர் இந்த நாடகத்தில் கதாநாயகனாக நடித்தார். பேராயர் இந்த நாடகத் தில் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக நடித்தார்.

பேராயர் மெற்றிக்குலேசன் வகுப்புக்கு வந்தபின் கணிதத் திலும் விஞ்ஞானத்திலும் தமக்கு உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யப் பெரிதும் பாடுபட்டார். இலண்டன் டியூட்டரி கல்லூரி வெளியிட்ட வினா—விடைப் புத்தகங்களைப் பிரதி செய்து அவற் றைக் கற்பதில் ஊக்கமாக ஈடுபட்டார். இரவு ஒரு மணி நேரம் வரை விழித்திருந்து இப்பாடங்களைக் கற்றுக் கொண்டார். அக் காலத்தில் மின்சார விளக்குகள் இருக்கவில்லை. அரிக்கன் விளக் குடன் அவற்றைக் கற்பதில் ஈடுபட்டார். சிறிது சிறிதாகக் கணிதமும் விஞ்ஞானமும் அவருக்குப் புலப்படலாயின. பரீட்சை க்கு அவர் சென்ற பொழுது அவருக்குப் பூரணமான தெளிவு ஏற்பட்டு விட்டது.

பரி. யோவான் கல்லூரியிலே மெற்றிக்குலேசன் படிப்பு வரை படித்துத் தேறிவிட்டுப் பேராயர் அக்கல்லூரியினின்றும் நீங்கினார். அதன் பின்னர் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் தற்காலிக ஆசிரியராக ஏறத்தாழ ஒரு வருட காலம் பணி புரிந்தார். ஆனால் அவர் மனம் உயர் கல்வியையே நாடியது. உயர் கல்வி பெறுவதற்கு Inter Arts பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இக்காலக் கட்டத்தில் யாழ் மாவட்டத்தில் யாழ்ப் பாணக் கல்லூரியே Inter Arts வகுப்புக்களை நடாத்திக் கொண்டி ருந்தது. எனவே பேராயர் யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்வத ற்குத் திட்டமிட்டார். யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவனாகச் சேருமுன் சிறிது காலம் பேராயர் கீரிமலையில் தமது மைத்துனர் திரு. கார்த்திகேசு வீட்டில் தங்கியிருந்தார். 1922 ம் ஆண்டு சரோஜினி நாயுடு யாழ்ப்பாணம் வந்து, Ridgeway மண்ட பத்திற்கு அருகாமையில் (இன்றைய நகர மண்டபம் அமைந்துள்ள இடம்) சொற்பொழிவு ஆற்றினார். பேராயர் கீரிமலையிலிருந்து யாழ்ப்பாணம் சென்று அந்த அம்மையாரின் சொற்பொழிவைக் கேட்டார். அவரின் பேச்சும், சிந்தனைத் தெளிவும் இலட்சிய வேட்கையும் பேராயரைப் பெரிதும் கவர்ந்தன.

Inter Arts பரீட்சையிலும் பீ.ஏ. பரீட்சையிலும் மாண வர்கள் நான்கு பாடங்களில் தேர்ச்சி அடைய வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் பல்கலைக்கழகம் விதித்திருந்தது. அப்பாடங்கள் பின்வருமாறு: ஒரு தற்கால மொழி, ஒரு பண்டைக்கால மொழி, ஒரு பூரண விஞ்ஞான பாடம் அல்லது அரை விஞ்ஞான பாடம், மாணவர் விரும்பும் இன்னொரு பாடம். இப்பாடங்களில் பண்டைக்கால மொழியில் தேறுவதே மிகக் கடினமான வேலையாக இருந்தது. புனித ஹென்றி அரசர் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் பேராயர் தமது உறவினர் ஒருவரின் வீட்டிற்கு சென்றிருந்தார். அங்கு Dr. Abbot அவர்கள் எழுதிய Via Latina என்ற நூலைக் கண்டார். அந்த நூலை மேலோட்டமாகப் பார்த்த போது இலத்தீன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம் என்ற தைரியம் ஏற்பட்டது. பண்டைக்கால மொழிகள் ஒரு முறை பேச்சு வழக்கில் இருந்தன. ஆகவே அது மீண்டும் பேசப்படக் கூடிய மொழி என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். ஓர் ஆழ்ந்த கணிதப் பிரச்சினையைப் போலச் சிலருக்கு மட்டும் புலப்படக் கூடியதன்று. எனவே பேராயர் இந்த நூலை ஹென்றி அரசர் கல்லூரிக்கு எடுத்துச் சென்றார். அங்கிருந்த ஓர் ஆசிரியரின் துணையுடன் தாம் கண்டெடுத்த இலத்தீன் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினார்.

1922 ம் ஆண்டு நடுப்பகுதியில் ஹென்றி அரசர் கல்லூரியை நீங்கி இலத்தீன் மொழியை மிகுந்த பிரயாசத்துடன் கற்கத் தொடங்கினார். இதனால் யாழ்ப்பாணக்கல்லூரியில் மாணவனைச் சேர்ந்த பின்னர் இலத்தீன் மொழியைக் கற்பது அவருக்கு சுலபமாகவும் சுவாரசியமாகவும் இருந்தது.

பேராயர் யாழ்ப்பாணக்கல்லூரியில் மாணவனைச் சேர்ந்து கொண்ட நாள் 1923 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 2 ம் திகதி ஆகும். அப்பொழுது யாழ்ப்பாணக்கல்லூரியின் அதிபராக இருந்த வண. John Bicknell விடு முறைக்காக அமெரிக்கா செல்ல விருந்தார். வண. M. H. Harrison என்னும் அமெரிக்க மிஷனரி கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்தார். இவருடன் ஜே. வீ. செல்லையா, எல். எஸ். பொன்னையா, ஈ. ஜீ. நிக்கொலஸ், ஏ. சி. சுந்தரம்பிள்ளை, டி. எஸ். சாண்டேர்ஸ், அ. ஆபிரகாம் ஜே. சி. அமரசிங்கம், சி. டபிள்யூ. பெல்ப்ஸ் ஆகியோர் கற்பித்து வந்தனர்.

யாழ்ப்பாணக்கல்லூரியில் Inter Arts வகுப்பில் பண்டைக்கால மொழியாக இலத்தீன் மொழி கற்பிக்கப்பட்டு வந்தது. இலண்டன் பல்கலைக்கழகத்தினர் சமஸ்கிருதத்தையும் தமது பாடத் திட்டத்தில் சேர்த்திருந்தாலும் மிஷனரிமாருக்கு அம்மொழி தெரியாதபடியினாலே இலத்தீன் மொழியையே கற்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்க மொழியை அவர்கள் அறிந்திருந்தாலும் இலத்தீன் ஆங்கிலக் கல்விக்குத் துணை புரியும் என்ற காரணத்தினுல் அவர்கள் இலத்தீனைக் கற்பித்தனர் என்று கருதக் கிடக்கின்றது. யாழ்ப்பாண மாணவர்களுக்குப் பண்டைக்கால மொழி ஒரு பெரும் சுமையாகவே இருந்து வந்தது.

பேராயர் குலேந்திரனுக்கு வண. பிக்னலின் கீழ் இலத்தீன் மொழியைக் கற்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனுல் அவரைப் போன்ற ஆற்றல் மிக்க ஆசிரியரான வண. எம் எச். ஹரிசன் கற்பித்தார்.

பேராயர் தமக்குக் கிடைத்த ஆசிரியர்கள் எல்லோருமே தெளிந்த சிந்தனையாளர்கள் என்று கூறியுள்ளார். இலத்தீன் மொழியை திரு. ஜே. வி. செல்லையா என்னும் ஆங்கில மேதை கற்பித்து வந்தார். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் உயர்ந்த புலமை வாய்க்கப் பெற்றவர். அரை விஞ்ஞான பாடமாகப் பேராயர் அளவியலைத் தேர்ந்து கொண்டார். இப் பாடத்தினையும் வண. எம். எச். ஹரிசன் அவர்களே கற்பித்து வந்தார். தான் விரும்பிய பாடமாகப் பேராயர் ''ஆங்கிலேயர் அரசியல் யாப்பினை'' த்தேர்ந்து கொண்டார். வண. எம். எச். ஹரிசன் மாணவர்களுடன் சேர்ந்து இலத்தீனை மிகுந்த ஆர்வத்துடன் கற்று வந்தார். இவர் ஓர் உண்மையான மாணவனுகவே சாகும் வரை இருந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியனுக இருந்த போது திரு. ஹரிசன் கலாநிதிப் பட்டம் பெற்றுப் பின்னர் பெங்களூர் இறையியற் கல்லூரிக்கு அதிபராகச் சென்றுர்.

ஆங்கிலேயர் அரசியல் யாப்பினைக் கற்பித்த எம். ஐ. தாமஸ் அவர்களைப் பற்றிக் கூறவே தேவையில்லை. Inter வகுப்பு மாணவர்கள் Ph. d அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பது இவருடைய எண்ணம். Inter Arts வகுப்பினருக்கு ஆங்கிலேய அரசியல் யாப்பு, அமெரிக்க அரசியல் யாப்பு, இந்திய அரசியல் யாப்பு என்பவற்றினை ஐயந்திரிபறக் கற்றுக் கொடுத்தார். எனவே யாழ்ப்பாணக்கல்லூரியில் அவரிடம் ஆங்கிலேய அரசியல் யாப்பினைக் கற்றுக் கொண்ட மாணவர்கள் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் பெற்றிருந்த அறிவைவிடப் பத்து மடங்கு அறிவைப் பெற்றிருந்தனர். அளவியலைப் பேராயர் புதிதாகக் கற்றமையினுல் மிகுந்த பிரையாசத்துடன் அதை மேற் கொள்ள வேண்டியிருந்தது.

அப்பொழுது யாழ்ப்பாணக்கல்லூரியின் விடுதிச்சாலையில் இருந்து பேராயர் கற்றுர். அப்பொழுது விடுதிச்சாலை இன்றைய வட்டுக்கோட்டை குருமனையில் இருந்தது. பேராயர் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மேற்பார்வையாளராகத் திரு. டி எஸ். சான்டஸ் அவர்கள் இருந்தார்கள். இவர் மிகுந்த பக்தியும் கடமையுணர்வும் கொண்ட பண்பாளர்.

வட்டுக்கோட்டையில் இருந்து மானிப்பாய்க்கு விடுமுறைகளைக் கழிக்க நடந்தே சென்முர். அவருடன் அவரின் இணைபிரியாத நண்பராகிய ஹன்டி பேரின்பநாயகம் அவர்களும் கூடிச் சென்ருர். குலேந்திரனின் சக மாணவர்களாகத் திரு. எஸ். ஆர். கனக நாயகம், திரு. ஹன்டி பேரின்பநாயகம், பி. டபிள்யூ. ஜே. முத்தையா, திரு. எம். எம். றஹீம் ஆகியோர் கற்றனர். வேறு பல அரிய நண்பர்களும் அப்போது இருந்தனர்.

1924 ம் ஆண்டு குலேந்திரன் Inter Arts பரீட்சையை எடுத்தார். அடுத்து பட்டதாரிப் படிப்புக்காகக் கொழும்பு பல் கலைக்கழகக் கல்லூரிக்குச் செல்ல விரும்பினுர். யாழ்ப்பாணக் கல்லூரியில் கலைமாணி விஞ்ஞானமாணி வகுப்புக்கள் 1947 ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

குலேந்திரன் இரண்டு வருடங்கள்தான் யாழ்ப்பாணக் கல்லூரி யில் கற்ருர். ஆனுல் அக்கல்லூரியின் சிறப்புகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. தாம் எழுதிய யாழ்ப்பாணக்கல்லூரி வரலாற்றில் அதைப் பற்றி நெஞ்சுருகி எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வி

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1922 ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தது. இக் கல்லூரி இலண்டன் பல்கலைக்கழக கலமாணி, விஞ்ஞானமாணிப் பரீட்சைகளுக்குப் போதனை அளித்து வந்தது. மெற்றிக்குலேசன் பரீடசையில் சித்தியடைந்தவர்கள் இக் கல்லூரியில் Inter வகுப்பிலும் Inter பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் B.A., அல்லது B.Sc. முதலாம் வருடத்திலும் சேர்க்கப் பட்டனர். எனவே மெற்றிக்குலேசனுடன் சென்றவர்கள் இங்கு மூன்று வருட காலமும் மற்றவர்கள் இரண்டு வருட காலமும் கல்வி கற்றனர். இப் பல்கலைக்கழகக் கல்லூரி இப்போது Royal கல்லூரி அமைந்துள்ள இடத்தில் இயங்கி வந்தது.

குலேந்திரன் Inter Arts பரீட்சை எழுதி ஒரு வருட காலத்துள் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்ந்து கொண் டார். அப்பொழுது பல்கலைக்கழகக் கல்லூரியில் எல்லாமாக முன்னூறு பேர் வரைதான் பயின்று வந்தார்கள். திரு. அ. மார்ஸ் இக்கல் லூரியின் அதிபராக விளங்கினுர்.

இவர் British பேரரசின் விசுவாச மிக்க ஊழியர். Knight Companion of the British Empire என்பது இவர் பெற்ற விருது. அத்து டன் Oxford பல்கலைக்கழகத்தின் M.A. பட்டதாரியாகவும் விளங் கினுர். தமது அலுவல் ஆசனத்தில் உட்காரும் முன்னர் British படைக்கலச் சின்னங்களுக்குச் சல்யூட் செய்து விட்டு உட்காரு வார். கண்டிப்பு மிகுந்தவர். பல்கலைக்கழகத்தில் British பேராசிரியர் களே அதிகமாகக், கடமையாற்றி வந்தனர். Liegh Smith என்ப வர் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கினுர். Walter S. Senior இலத்தீன் மொழியைக் கற்பித்து வந்தார். வரலாற்றுப் பேரா சிரியராக S. A. Pakeman என்பவர் பணியாற்றி வந்தார். பொருளியல் பேராசிரியராக P. I. தோமஸ் என்னும் இந்தியப் பேரறிஞர் விளங்கினுர். பேராசிரியர் F. H. குலசேகரம், சி. சுந்தரலிங்கம் ஆகியோர் கணிதத்தைப் போதித்து வந்தனர்.

அக்காலத்தில் பீ.ஏ. பரீட்சைக்குப் பின்வரும் பாடங்களில் ஒன்றில் தேற வேண்டியிருந்தது. பண்டைக்கால மொழி தற்கால மொழி, ஒரு அரை விஞ்ஞானப் பாடம் இன்னுெரு விரும்பிய பாடம். கலைமாணிப் பரீட்சை இரண்டு வருட முடிவின் பின் னரேயே நடைபெற்று வந்தது. குலேந்திரன் பீ.ஏ. பரீட்சைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக்கால மொழியாக இலத்தீன் மொழியையும் தற்கால மொழியாக ஆங்கிலத்தையும் அரை விஞ்ஞான பாடமாகப், பொருளியலையும் விரும்பும் பாடமாக வரலாற்றையும் தெரிந்து கொண்டார்.

இக்காலப் பகுதியில் பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களுக் கென நான்கு மாணவர் விடுதிகள் இயங்கி வந்தன. அவைகளுள் யூனியன் விடுதி (Union Hostel) என்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. யூனியன் விடுதி எல்லா மதத்தினருக்கும் உரியதாக விளங்கியமையினுல் எல்லா மதத்தவரும் ஒருங்கு கூடவும் கலந் துரையாடவும் அது வசதி அளித்தது. பேராசிரியர் சி. சுந்தரலிங் கம் இதன் மேற்பார்வையாளராக இருந்தார். Oxford இல் உள்ள பேலியல் (Balliol) கல்லூரியில் படித்துவிட்டு உத்வேகமும் ஆர்வமும் மிக்க விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கியிருந்தார். அவர் மாணவர்களின் உரிமைக்காகவும், வசதிகளுக்கும் எப்பொ ழுதும் குரல் எழுப்பிய அற்புத மனிதர். விடுதி மாணவர்களுடன் சரிசமமாகப் பழகி அவர்களின் அன்பைப் பெற்றுக் கொண்டார். மாணவர்கள் எல்லோரும் திரு. சி. சுந்தரலிங்கத்தின் ஆலோசனை களை விரும்பிக் கேட்டனர். ''எதனையும் எழுத்தில் போட்டுவிடா தீர்கள்'' (Don't put down anything in writing) என்பது பேராசிரி யர் சுந்தரலிங்கம் அடிக்கடி கூறுகின்ற வாசகமாக இருந்தது. குலேந்திரன் கிறிஸ்தவ மாணவர்களுக்கென வேறு விடுதிகள் இருந்த போதிலும் இந்த விடுதியிலேயே சேர்த்துக் கொண்டார். அரசியலிலும் திருச்சபையிலும் பிற்காலத்தில் பிரகாசித்த வேறு பலரும் இந்த விடுதியில் அப்பொழுது தங்கியிருந்தனர்.

(D. T. Niles, Colvin R. De. Silva), திரு. ஜேம்ஸ் இரத்தி னம், திரு. எஸ். நடேசன் (Senater), திரு. பி. சிறிஸ்கந்தராஜா, திரு. கே. ஏ. செல்லையா, திரு. ஐ. பி. துரைரத்தினம் ஆகியோர் இவர்களிலே குறிப்பிடத்தக்கவர்கள். குலேந்திரன் பல்கலைக்கழகத்தில் மிகுந்த ஆர்வத்துடன் கற்ருர். கட்டிளங் காளைகளும் பருவப் பெண்களும் நடமாடுகின்ற இச் சிங்காரச் சோலையில் அவர் படிப்பிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். ''அறிவோர்க்கு நாரியரும் துரும்பாம்'' என்ற கோட் பாட்டிற் கேற்ப அவரது பல்கலைக்கழகக் கல்லூரி வாழ்க்கை நடந்தேறியது.

பல்கலைக்கழகக் கல்லூரியில் இவரின் நெருங்கிய நண்பரான பி. சிறிஸ்கந்தராஜா உதைப்பந்தாட்டக் கோஷ்டியின் தலைவராக இருந்தார். அவர் குலேந்திரனை உதைப்பந்தாட்டக் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டார். ஆனுல் குலேந்திரனுல் உதைப்பந்தாட் டம் விளையாட முடியவில்லை. குத்துச் சண்டையில் (Boxing)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வம் கொண்டு பயிற்சி செய்தார். ஒரு முறை பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர் அவையில் ஆங்கிலத்தில் நடைபெற்ற ஒரு விவாதத்தில் கலந்து கொண்டார். பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களுக்குச் சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதில் ஆர்வம் இருக்கவில்லை. விவாதம் முடியும் வரை ரகளையும் அட்டகாசமும் மேலோங்கி நின்றன. இறுதியில் விவாதம் ஒருவாறு முடிவுற்றது. அது கில்லாடிகளின் கூட்டமென்று குலேந்திரன் வேதனையுடன் நினைவு கூருகின்றார். இந்த விவாதத்தைத் தொடர்ந்து குலேந்திரனுக்குக் காய்ச்சல் வந்து விட்டது. மூன்று நாட்கள் படுத்த படுக்கையாகிவிட்டார்.

பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் பெரும்பாலும் B.A. (General) அல்லது B.Sc General என்ற பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். குலேந்திரன் படித்த காலத்தில் ஒருவர் B. A. (Hons) நெறியை ஆங்கிலப் பாடத்திலும் இன்னொருவர் வரலாற்றிலும் செய்து கொண்டிருந்தனர். M.A. பட்டத்தைப் பற்றியாவது Ph. d பட்டத்தைப் பற்றியாவது மாணவர்கள் சிந்திப்பது மிகமிக அரிதாக இருந்தது.

குலேந்திரன் பீ.ஏ. இறுதிப் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த போது அவருக்கு மிகச் சோகமான செய்தி வந்தது. அக்காலத்தில் ஒவ்வொரு பாடத்திலும் நான்கு வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டியிருந்தது. இலத்தீன் பாடத்தில் மூன்று வினாத்தாள் களுக்கு விடை எழுதிவிட்டார். வியாழக்கிழமை நான்காவது வினாத்தாளுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் தந்தை மறைந்து விட்டாரென்று செய்தி வந்தது. குலேந்திரன் வியாழன் இரவே மானிப்பாய் வந்து சேர்ந்தார். வெள்ளியும், சனியும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு விட்டு ஞாயிறு இரவு மீண்டும் கொழும்பு சென்றார். திங்கட்கிழமை இலத்தீனின் நான் காவது வினாத்தாளுக்கு விடை எழுதினார். அதில் சித்தியும் அடைந்தார். இது குலேந்திரனின் மனோ பலத்தையும், திடசங்கற்பத்தையும் காட்டுகின்ற சம்பவமாகத் திகழ்ந்தது.

பல்கலைக்கழகக் கல்லூரி நாட்களில் குலேந்திரனுக்குச் சேர் பி. இராமநாதனுடன் ஒரு மணி நேரம் உரையாடுகின்ற வாய்ப்பு கிட்டியது. அப்பொழுது சேர் பி. இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரியை நடத்திக் கொண்டிருந்தார். 1925 ம் ஆண்டில் அங்கு மெட்டிக்குலேசன் வகுப்பிற்கு ஆங்கிலம், இலத்தீன் முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் சடுதியாக விலகி விட்டார். ஒன்றரை மாதத்திற்கு அந்த வகுப்பிற்கு இலத்தீன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் என்பவற்றைக் கற்பிக்க ஒருவர் தேவைப்பட்டார். சிலர் குலேந்திரனின் பெயரை சேர் பி. இராமநாதனுக்குச் சிபாரிசு செய்தார்கள். குலேந்திரன் அப்பொழுது யாழ்ப்பாணம் வந்திருந்தார். சேர் பி. இராமநாதன் குலேந்திரனை அழைத்து ஒரு நேர்முகப் பரீட்சை நடத்தினர். இந்தச் சந்திப்பு ஏறத்தாழ ஒரு மணி நேரம் நடைபெற்றது. சேர் பி. இராமநாதன் பல்கலைக் கழகத்தைப் பற்றியும் நாட்டு நடப்புக்கள் பற்றியும் குலேந்திர னிடம் உரையாடிவிட்டு அவரைப் பரமேஸ்வராவில் கற்பிக்கும் படி கூறினர். பல்கலைக்கழகக் கல்லூரிப் படிப்பு நிறைவேறுகின்ற காலத்திலே தான் குலேந்திரன் உள்ளத்தில் மதத் தொண்டாகும் வாஞ்சை ஏற்பட்டது. இந்த வாஞ்சைக்கு யாருமே காரணமாக இருக்கவில்லை. அவருடைய உள்ளத்தில் சடுதியாக ஓர் அனல் ஏற்பட்டது. ஆனல் இந்த ஊழிய வாஞ்சை அவரது தகப்பனு ருக்கும் சகோதரிகளுக்கும் பேரிடியாக இருந்தது. நியூமோனியா வில் படுத்திருந்த தந்தை இதைக் கேட்டபின் எழுந்திருக்கவே இல்லை. சகோதரிகள் வேதனையுடன் குமுறினர்கள். ஆனல் குலேந் திரன் தனது தீர்மானத்திலிருந்து விலகவேயில்லை.

குலேந்திரனின் பல்கலைக்கழகப் படிப்பு 1927 இல் முடிவுற்றது. இதன் பின்னர் சிறிது காலம் தற்கால ஆங்கில ஆசிரியராக யாழ்ப்பாணக்கல்லூரியில் அமர்ந்திருந்தார். அப்பொழுது யாழ்ப் பாணக்கல்லூரியில் வண. எம். எச். ஹரிசன் பதில் அதிபராகப் பணியாற்றி வந்தார். ஏனெனில் வண. ஜோன் பிக்னல் M.Ed. படிப்புக்காக அமெரிக்காவில் இருந்த யேல் பல்கலைக்கழகத்திற் குச் சென்றிருந்தார். குலேந்திரன் தமது பழைய நண்பர்களான திரு. ஹன்டி பேரின்பநாயகம், திரு. கே. எ. செல்லையா, திரு. ஐ. பி. துரைரத்தினம், திரு. எல். எஸ். குலத்துங்கம், திரு. டி. எஸ். சாண்டர்ஸ், திரு. எ. சி. சுந்தரம்பிள்ளை முதலி யோரின் ஆசிரியர் குழுவில் சேர்ந்து கொண்டார். குலேந்திரன் மத குருவாகப் பணியாற்ற முடிவு செய்திருந்தாலும் எந்த மிஷனைச் சேர்வது தீர்மானிக்கப்படவில்லை. C.M.S. மிஷனுடன் அவருக்கு நீண்டகாலத் தொடர்பு இருந்தது. அவர்கள் தாமே வந்து தம்மிடம் ஊழியத்தில் சேருமாறு அழைப்பு விடுவார்க ளென்று அவர் காத்திருந்தார். ஆனல் அவர்கள் குலேந்திரனை அழைக்கவில்லை. S.I.U.C. திருச்சபையார் தமது திருச்சபையில் ஊழியனுக வரும்படி அழைப்பு விடுத்தனர். குலேந்திரன் S.I.U.C. சங்கத்தில் சேர்ந்து கொள்ள முடிவு செய்தார்.

இறையியல் பயிற்சிக்காக அக்காலத்தில் செரம்பூர் கல்லூரிக்குச் செல்வதே பெரு வழக்காக இருந்தது. 1928 ம் ஆண்டு ஜூன் மாதம் அவர் உற்றுர் உறவினருக்குப் பிரியாவிடை கூறிவிட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செரம்பூருக்குப் புறப்பட்டார். செரம்பூர் கல்கத்தா மாநகரைச் சேர்ந்த ஒரு துணை பட்டினமாகும். கங்கையாற்றின் ஒரு கிளை யான ஹாக்கிலி (Hoogli) நதியோரமாக இந்தக் கல்லூரி அமைந் திருந்தது.

*1818* ம் ஆண்டு வில்லியம் கேரி செரம்பூர் கல்லூரியை இப் பட்டணத்திலே ஆரம்பித்தார். *1928* ல் இங்கு ஏறத்தாள *300* பல்கலைக் கழக மாணவர்கள் இருந்தனர். H.T.D. எனப் பட்ட உயர் இறையியல் துறை என்பதே முக்கியமானதாக இருந்தது. அந்தத் துறையில் ஏறத்தாழ முப்பது மாணவர்கள் பயின்று வந்தனர்.

குலேந்திரன் வரலாறு, சமயம், அரசியல் ஆகிய துறைகளில் மிகுந்த ஆர்வமுடையவர். இப்படிப்பட்ட ஆர்வமுள்ளவர் இந் தியா செல்வதற்கு *1928* ம் ஆண்டைவிடச் சிறந்ததொரு காலம் இருந்திருக்க முடியாது. Lord Irwin இராஜ பிரதிநிதி யாகவும் மகா தேசாதிபதியாகவும் பதவியேற்றிருந்தார். மேற்கு வங்கா ளத்தின் தேசாதிபதியாக Sir Stelaly Jackson பணியாற்றி வந்தார். அங்கிலிக்கன் பிரதம பேராயராகக் கல்கத்தாவில் Foss Westcott விளங்கினார்.

ஆங்கிலக் கல்வி மிகுந்த சிறப்புப் பெற்றிருந்தது. அதே சமயம் இந்திய சுய இராச்சிய இயக்கமும் உச்சக் கட்டத்தினை அடைந் திருந்தது. அண்ணல் காந்தி அதன் தலைமையை ஏற்று உயர்ந்த இலட்சியங்களுடனும் எண்ணப் பாங்குகளுடனும் அதனை நடாத்தி வந்தார். மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, இராஜாஜி, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற மகாவீர தியாகிகள் சுதந்திர இயக்கப் போராட்டத்தில் ஊக்கமாக ஈடுபட்டு உழைத்தனர். அக்காலத் தில் இந்தியாவும், இலங்கையும் முற்றிலும் வேறுபட்ட இரண்டு நாடுகளாக இருக்கவில்லை. இந்தியர் இலங்கை வரு வதற்கோ இலங்கையர் இந்தியா செல்வதற்கோ பாஸ்போட், விசா என்ற கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. குலேந்திரனுடன் செரம்பூரில் இறையியல் கல்வி கற்க எஸ். எஸ். செல்வரத்தினம், பி. சி. டி. மேதர் ஆகியோரும் யாழ்ப்பாணத்திலிருந்து புறப் பட்டனர். இரத்தினதிக்கம் அவர்களும் இக்காலக் கட்டத்தில் செரம்பூர் சென்றாரென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியப் பயணம் மிகவும் சுவாரசியமாக இருந்தது. செரம்பூர் கல்லூரி மாணவர் கள் தலைமன்னார் சென்று அங்கிருந்து இரண்டு மணி நேரம் கப்பலில் பிரயாணம் செய்து பின்னர் தனுஷ்கோடியை அடைவர். அங்கிருந்து Southern Railway என்ற புகையிரத மார்க்கமாகச் சென்னை சென்றடைவர். சென்னையில் அவர்கள் ஒரு நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவதற்கு அவகாசம் கிடைக்கும். பின்னர் சென்னையிலிருந்து Bengal Nagpur Railway மூலமாகக் கல்கத்தா சென்றடைவர். இந்தப் புகையிரதங்களில் நாலு அணுவுக்குச் சிறந்த தாவர போசனம் வழங்கப்பட்டது. நாட்டின் நடப்புகளை அவதானித்த படியே மூன்று நாட்கள் பிரயாணம் செய்வர். செரம்பூரில் யாழ்ப் பாணத்து மாணவராகிய ஜே. என். சிங்கநாயகம் ஏற்கனவே சேர்ந்திருந்தார். இவர் குலேந்திரனுக்கு இறையியல் கல்வியில் ஒரு வருடம் சிரேஷ்டர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குலேந்திரன் முதலியோர் சென்ற காலத்தில் வண. எச். ஜி. ஹோவெல்ஸ் கல்லூரி முதல்வராக இருந்தார். ஆராய்ச்சித்திறன், மதி நுட்பம், கருணை, நிர்வாக ஆற்றல் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற மகான். இவர் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாகவும் விளங்கினார். இறையியற் பயிற்சி, பட்ட தாரிகளுக்கு மூன்று வருடமாகவும் ஏனையோருக்கு நான்கு வருட மாகவும் இருந்தது. பி. டி. பாடத்திட்டம் பொதுவாகப் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, இறையியல், சமயங்கள், திருச்சபை வரலாறு என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. பழைய ஏற்பாட்டினை எச். ஜீ. ஹோவெல்ஸ் அவர்களே நடாத்தி வந் தார். வாரத்திற்கு ஒரு முறை யோபுவின் புத்தகத்தில் பகுப் பாய்வு கற்பிப்பது அவர் திட்டமாக இருந்தது. அவர் பதவியி னின்றும் நீங்கிய பொழுது வண. ஆர். ஏ. Barclay என்பவர் பழைய ஏற்பாட்டைக் கற்பித்தார். இவர் ஒரு தலை சிறந்த பழைய ஏற்பாட்டு அறிஞர் என்பது குலேந்திரன் கருத்து. எபிரேய மொழியைக் கற்பித்தவரும் இவரே.

புதிய எற்பாட்டினையும் கிரேக்க மொழியையும் வண. ஜீ. ஏச். சீ. Angus கற்பித்து வந்தார். இறையியலை வண. எச். ஜி. ஹோவெல்ஸ் அவர்களும் பின்னர் வண. டபிள்யூ. டபிள்யூ, வின்ட்பீல்ட் அவர்களும் கற்பித்தனர். பிற்காலத்தில் சிறந்த இறையியல் அறிஞராக வந்த குலேந்திரனுக்கு இறையியலை அறி முகம் செய்து வைத்த பெருமை வின்டபீல்ட்டுக்கே உரியது. வின்ட்பீல்ட் மகா வீரனென்று குலேந்திரன் அடிக்கடி கூறுவார்.

சமயங்கள் என்ற பாடத்தைக் கற்பித்த வண. Rawsen என்பவர் ஆற்றல் மிகுந்தவர் எனினும் ஏகாதிபத்தியவாதி. 1919 ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் காரணமாக விருந்த General Dyer இன் ஊதியத்தை நிறுத்தியது. அப்பொழுது சில ஆங்கிலேய உத்தியோகத்தர்கள் தாமாகப் பணந் திரட்டி General Dyer க்கு உதவியளித்து வந்தனர். திரு. ஆர். என். Rawsen இவ்வாறு உதவியவர்களில் ஒருவர். எனவே வங்காளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் அவரை நஞ்செனவெறுத்தார்கள். திருச்சபை வரலாற்றினையும் எச். ஜி. ஹோவல்ஸ் அவர்களே கற்பி த்தார்கள்.

எச். ஜி. ஹோவெல்ஸ் 1929 ம் ஆண்டு தமக்கு வயதாகிவிட்ட தெனக் கூறி இளைப்பாறி விட்டார். அவருக்கும் பிரிட்டிஷ் பிரத மர் வின்சன்ட் சேர்ச்சிலுக்கும் ஒரே வயது. எச். ஜி. ஹோவெல்ஸ் 1929 ம் ஆண்டு தமது பணி முடிந்து விட்டது என்று கருதினார். ஆனால் சேர்ச்சிலின் பணி அப்பொழுதுதான் ஆரம்பமானது. ஒருவனின் வாழ்க்கையில் மிகப் பயனுள்ள காலக் கட்டம் எந்த வயதிலும் ஆரம்பமாகலாம் என்பதற்கு இது சான்றாக அமை கின்றது. வண. எச். ஜீ. ஹோவெல்ஸ் இளைப்பாற வண. ஜீ. ஏச். சி. அங்கஸ் முதல்வரானார்.

செரம்பூரில் கற்ற மூன்று வருடங்களும் குலேந்திரனுக்கு மிக வும் இனிமையான காலமாக இருந்தன. வருடம் ஒரு முறை கோடை விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வருவது அவர் வழக்க மாக இருந்தது. ஏப்பிரல், மே, ஜுன் மாதங்களை யாழ்ப்பாணத் தில் கழித்துவிட்டுத் திரும்பவும் செரம்பூர் செல்வார்.

எபிரேய மொழியில் குலேந்திரன் மிகுந்த பாண்டித்திய முள்ளவராக விளங்கினார். கிரேக்க மொழியிலும் மிக உயர்ந்த புள்ளிகளைப் பெற்றார்.

நூல் நிலையத்திற்குச் சென்று தரமான பத்திரிகைகளைக் குறிப் பாக Hiver Journal என்ற பத்திரிகையை வாசித்துத் தமது அறிவை விருத்தி செய்து கொண்டார்.

குலேந்திரன் ஆற்றில் நீந்துவதைத் தமது சிறந்த பொழுது போக்காகக் கொண்டிருந்தார். ஹுக்லி நதியில் தினசரி நீராடி மகிழ்ந்தார். 1928 ம் ஆண்டு அவர் செரம்பூர் சென்றடைந்த வருடம் கல்கத்தாவில் ஒரு பயங்கர நிகழ்ச்சி நடைபெற்றது. யாழ்ப்பாணத்து மாணவரான ஜெகோ இரட்ணம் என்பார் பிஷப் கல்லூரியில் இறையியல் கற்று வந்தார். ஒரு முறை கங்கையில் நீராடிக் கொண்டிருந்த பொழுது நீரில் மூழ்கி மரணமானார். இது குலேந்திரனுக்கு எப்பொழுதும் ஒரு பலத்த எச்சரிக்கை யாகவே இருந்து வந்தது.

1928 ம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாட்டைப் பார்க்கும் பேற்றையும் குலேந்திரன் பெற்றார். அந்த மகாநாடு உயர் திரு. மோதிலால் நேருவின் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஜவகர்லால் நேரு செயலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளராகப் பணி யாற்றினுர். சிறினிவாச ஐயங்கார் அன்னிபெசன்ட், தீரர் சத்தியமூர்த்தி, மொகமட் அலி, சாகுத் அலி ஆகியோரின் வீர உரைகளைக் கேட்டு மகிழ்ந்தார்.

அக்காலத்தில் வங்காளத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவராகத் திகழ்ந்தவர் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களே ஆவர். அவர் வங்காளத்திலிருந்த முக்கியமான சதுக்கங்களில் சொற்பெருக்காற்றி வந்தார். அந்நிய ஆடைகளைத் தீயிட்டுக் கொழுத்தினுர். வெள்ளையனை எப்படியாவது வெளியேற்றி விட வேண்டுமென்பது அவரின் ஒரே சிந்தனையாக இருந்தது. குலேந்திரன் சுபாஸ் சந்திர போசின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தார். அவரின் குழந்தை உள்ளமும், தெளிவான பேச்சும் குலேந்திரனைப் பெரிதும் கவர்ந்தன. வரலாற்று வாணரான குலேந்திரன் விக்ரோரியா காட்சியகத்தினையும் டல் அவுஸி சதுக்கத்தினையும் பார்த்துக் களி கூர்ந்தார்.

குலேந்திரனுக்கு செரம்பூரில் இருந்த பொழுது இரவீந்தரநாத் தாகூரையும் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ. டபிள்யூ. அரியநாயகம் அவர்கள் அக்கால கட்டத்தில் கவி தாகூரின் செயலாளராக இருந்தார். குலேந்திரனும் வேறு சில யாழ்ப்பாண நண்பர்களும் சாந்தினி கேதன் சென்று அங்கு திரு. அரியநாயகம் வீட்டில் சில நாட்கள் தங்கினர். அரியநாயகத்தின் சகோதரனுகிய சௌந்திரம் வில்லியம் அவர்களும் அப்பொழுது கல்கத்தாவில் கற்று வந்தார். சாந்தினி கேதத்தில் நின்ற பொழுது பல தடவை தாகூரைப் பார்த்தார். ஆனுல் அவருடன் பேசுவதற்கு வாய்ப்புக் கிட்டவில்லை.

இந்தியாவின் கலாச்சார தலைநகரான கல்கத்தாவில் குலேந்திரனின் வாழ்க்கையில் மிக முக்கியமான காலக் கட்டம் கழிந்தது. இது இறுதிவரை அவருக்கு நல்ல அனுபவமாக இருந்தது. மேற்றிசை ஞானத்தின் சிறப்புக்களையும் இந்தியாவின் ஆன்மீகச் சிறப்புக்களையும் பார்த்து அனுபவிக்கும் பேறு பெற்றுர். இறுதி வரை குலேந்திரன் இந்தியாவின் ஆன்மீக சிறப்பையும், மேல் நாட்டார் சிந்தனைத் தெளிவையும் போற்றினுர். கல்கத்தாவில் கழித்த மூன்று வருடங்கள் இதற்கு முக்கிய அடித்தளமாயிற்று. 1939 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பி.ஏ., பி.டி. படிப்பை முடித்துவிட்ட குலேந்திரன் S.I.U.C. சபையின் ஊழியத்திற்குள் பிரவேசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத குரு

சுவிசேஷ ஊழியத்தில் பிரவேசிப்பவனுக்கு முதுசொப் பொரு ளும் சீதனச் சொத்துமாய் வைக்கப்பட்டவை முறையே நித்திய தரித்திரம். எல்லாரும் தன்னில் கூறுங் குறைகளையும் குற்றங்களை யும் பொறுமையாகக் கேட்டுச் சகித்தல். கனம் கந்தையாப் போதகர் தேவ ஊரியத்துக்குப் போக ஆலோசனை கேட்ட வனுக்குக் கொடுத்த பதில். (கனம் ஈ. ஆர். யேசுதாசன் போ தகரின் சீவிய சரித்திரக் குறிப்புகள்).

*1931* ம் ஆண்டு சபாபதி குலேந்திரன் இலண்டன் பீ.ஏ. பட்டதாரி, செரம்பூர் பீ.டி. பட்டதாரி, அச்சுவேலி திருச்சபை க்கு ஊழியராக அனுப்பப்பட்டார். இவருக்கு முன்னர் ஒரே யொரு பீ.ஏ. பட்டதாரிதான் S.I.U.C. யாழ்ப்பாணச் சபா சங்கத் தின் ஊழியனாகப் பணி புரிந்தார். குலேந்திரன் சேர்வதற்கு 20 வருடங்களுக்கு முன்னர் ஊழியஞ் செய்த ஜே. கே. சின்னத் தம்பி கல்கத்தா பல்கலைக்கழகத்தின் பட்டதாரி. 19 ம் நூற் றாண்டின் பிற்பகுதியிலும் 20 ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பணி புரிந்த அமெரிக்க மிஷனரிமார் ஆற்றல் மிக்கவர்களை ஊழி யத்தில் சேருமாறு அழைக்கவில்லை. அப்படிச் சேர்த்தால் தமக்கு அவர்கள் இடைஞ்சலாக இருப்பார்கள் என்று நினைத்து இவ்வாறு செய்தனர் என்று குலேந்திரன் ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்த பொழுது ஊழி யத்தில் சேர வேண்டுமென்ற வாஞ்சை குலேந்திரன் உள்ளத்தில் ஏற்பட்டது. அதனை அறிந்த தகப்பனார் நொத்தாரிசு சபாபதி புலம்பினார்.

''நான் ஒரு கட்டு ஓடியல் கொடுத்தனான். அதனை இந்தப் போதகர் எழுதவில்லை. இப்படிச் செய்துதானே முரிச்சுக்குத்துத் தாலி கட்டுறவங்கள் என்று என்னுடைய பிள்ளையை இத் தமிழ்ச் சட்டம்பிமார் திட்டப் போகிறுங்கள் இதற்குத் தானே இவன் போதகர் வேலைக்குப் போகப் போகிறேன் என்று நிற்கிறான்''.

இப்படி நொத்தாரிசு சபாபதி புலம்பினார். ஆனால் குலேந்திரன் மனந் தளர்ந்து போகவில்லை. இருபத்தி ஏழு வயதில் தான் மேற் கொண்ட தீர்மானத்தினின்றும் ஒரு பொழுதும் பின் வாங்கவில்லை. பட்டதாரிப் படிப்பை முடித்து இறையியல் பயிற்சியை முடித்துத் தெளிந்த சிந்தனையுடன் ஊழியத்திற்குப் பிரவேசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் ஊழியர் இட மாற்றம் உட்படச் சகல முக்கிய கருமங்களும் S.I.U.C. நிர்வாகக் குழுவின் கையிலேயே இருந்தது. அச்சுவேலிக் குருமனையில் பிரமச்சாரியாகச் சென்று ஊழிய வாழ்வைத் தொடங்கினர். 1931 ம் ஆண்டு மே மாதம் 2 ம் திகதி அச்சுவேலித் திருச்சபையின் பிரசங்க மேடையில் ஏறி ஏபேசியர் 4ம் அதி. 7ம் வசனத்தில் பிரசங்கம் செய்தார்.

''கிறிஸ்துவினுடைய ஈவின் அளவிற்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்படுகிறது''

இந்த வசனம் குலேந்திரனின் இறையியலின் சாரமாக விளங்கியது. ஆரம்ப காலக் கட்டத்தில் தமது அருளுரைகளில் அறத்திற்கும் நற்குண நற்செயல்களுக்குமே முக்கியத்துவம் அளித்தார். குலேந்திரனின் நெடுங்கால நண்பர்களான திரு. கு. நேசையா, திரு. ஜே. சி. ஹன்டி ஆகியோர் தூர இடங்களிலிருந்து சென்று குலேந்திரனின் முதலாவது பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

அச்சுவேலித் திருச்சபையின் செயற் குழுவில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசவல்லவர்களான பலர் இருந்தார்கள். அச்சுவேலியின் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்பொழுது மிகுந்த உயர்ந்த தொனியில் பேசுவார்கள். அப்பொழுது வீதியால் நடந்து செல்பவர்கள் தேவாலயத்தில் ஏதோ சண்டை நடக்கிறது என்று சொல்லிக் கொள்வார்கள். குலேந்திரன் அச்சுவேலிக்குச் செல்லு முன்னர் அங்கு கடமையாற்றிய போதகருக்கு ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டிருந்தது. போதகர் அறிவித்தல்களை ஆராதனையில் கூறிக்கொண்டிருந்த பொழுது ஒரு சபையான் கோவிலின் மணியை அடித்துக் கொண்டிருந்தான். எனவே குலேந்திரன் மிகுந்த தயக்கத்துடனேயே அச்சுவேலித் திருச்சபைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அச்சுவேலித் திருச்சபைச் செயற் குழுவும், ஏனைய பெரியோரும் குலேந்திரன் மீது மட்டற்ற அன்பு காட்டினர்கள். குலேந்திரனைப் போன்ற அறிவும், பக்தியும் வாய்ந்த போதகர் தமக்குக் கிடைத்தது பற்றிப் பெருமிதப் பட்டார்கள். பிரமச்சாரியாக இருந்த குலேந்திரன் மீது அங்கிருந்த இளம் பெண்கள் மிகுந்த பரிவு காட்டினர்கள்.

குலேந்திரன் தமது பிரசங்கக் குறிப்புக்களை ஒரு சிறிய காகித உறையின் பின்புறத்தில் குறித்துக் கொள்வதனை வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் இளைஞராக இருந்தபடியினால் அடுத்த ஞாயிறு பேசவிருந்த அனைத்து விடயங்களும் அவருக்கு மனப்பாடமாக விருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலே வேளைகளில் தொண்டமனுருக்குச் செல்வதனை மரபாகக் கொண்டிருந்தார். அச்சுவேலியில் ஒரு வருட காலம் இன்பமாக கழிந்தது.

1932 ம் ஆண்டு அளவெட்டித் திருச்சபையில் ஒரு பிரச்சினை உருவாகியது. அளவெட்டித் திருச்சபையின் ஊழியனுக இருந்த வரை இன்னெரு இடத்திற்கு மாற்றி விட்டார்கள். ஆனல் அவரோ புதிய ஸ்தானத்துக்குச் செல்ல மறுத்தார். எனவே S.I.U.C. நிர்வாகக் குழு அளவெட்டித் திருச்சபையில் ஊழியம் செய்வதற்கு இன்னெருவரைத் தேடியது. குலேந்திரன் பூரண சம்மதத்துடன் அளவெட்டி செல்வதற்கு உடன் பட்டார். ஆனல் அச்சுவேலித் திருச்சபையாருக்கு இது கடுஞ் சினத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவிக்குமுகமாக அடுத்த ஞாயிறு காலே ஆராதனைக்கு வராது விட்டார்கள்.

அன்றைய தினம் குலேந்திரன் ஒரு சிறப்புப் பேச்சாளரை அச்சுவேலிக்கு அழைத்திருந்தார். சபையார் ஆராதனையைப் பகிஷ்காரம் செய்தது குலேந்திரனுக்குச் சொல்லொணு வேதனையை அளித்தது.

1932 ம் ஆண்டு ஜூலே மாதம், 1 ம் திகதி குலேந்திரன் தம்முடைய உறவினராகிய George Francis என்பவரையும் அழைத்துக் கொண்டு அளவெட்டி சென்ருர். அளவெட்டியில் குலேந்திரனுக்குப் பழக்கமானவர்கள் எவரும் இருக்கவில்லே. தெல்லிப் பளையில் வாழ்ந்து கொண்டு இருந்த அவருடைய நண்பர் திரு. பி. கே. சோமசுந்தரத்தையும் கூட்டிச் சென்ருர். அளவெட்டித் திருச்சபை ஊழியனின் இடமாற்ற விஷயத்தினுல் சபை இரண்டு கட்சிகளாகப் பிரிந்திருந்தது. ஆலயக் கட்டிடம் சபாசங்கத்தை எதிர்த்தவர்களுடைய கையிலே இருந்தது. எனவே குலேந்திரனும் அவருடைய நண்பர்களும் அளவெட்டி ஸ்தானப் பாடசாலேயில் வழிபாட்டினை நடத்த வேண்டி இருந்தது. இந்த ஆராதனைகளில் இரண்டு, மூன்று முறை திரு. பி. கே. சோமசுந்தரத்தின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர் தம் இசையினுல் சபையாரைப் பக்திப் பரவசத்துள் ஆழ்த்திஞர். அவருடைய முயற்சிகள் வீண் போகவில்லே. இறுதியில் ஆலயக் கட்டிடம் சபா சங்கத்திற்குச் சார்பானவர்களின் கையில் வந்து சேர்ந்தது. எனினும் அரைவாசிப் பேர் வழிபாட்டிற்கு வராமல் ஒதுங்கி நின்ருர்கள்.

அளவெட்டியில் இருந்த காலத்தில் குலேந்திரன் அந்த இடத்தின் குருமனையைக் கட்டி முடிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். இந்த வேலே அவருக்கு முன்பு அங்கிருந்த ஊழியனுகிய தம்பித்துரையினுலே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 1933 ம் ஆண்டு ஜூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் இந்தக் கட்டிட வேலை பூர்த்தியானது. கட்டிடத்தைச் சுற்றிவரத் தென்னம்பிள்ளைகள் நாட்டப்பெற்றன. தென்னம் பிள்ளைகள் இப்பொழுதும் நின்று பயன் கொடுக்கின்றதைக் காண லாம். பேராயர் குலேந்திரனுக்கு இது பேரின்பத்தை அளித்தது. குலேந்திரன் அளவெட்டியில் இருந்த காலத்திலேதான், அதாவது 1934 ல் அவருக்கு குரு அபிஷேகம் அளிக்கப்பட்டது. அப்பொழுது டீக்கன் அபிஷேகம் குருத்துவ அபிஷேகம் என இரண்டு அபி ஷேகங்கள் இருக்கவில்லை. குருத்துவ அபிஷேகம் மட்டுமே இருந் தது. வீடு வீடாகச் சென்று அபிஷேக ஆராதனைக்கு வரும்படி மக்க ளுக்கு அழைப்பு விட வேண்டியிருந்தது. அபிஷேக ஆராதனையை வண. R. C. P. Welch அவர்கள் நடாத்தினார்கள். அபிஷேகம் பெற்றிருந்த ஊழியர்கள் யாவரும் தலைமேல் கை வைத்தார்கள்.

அளவெட்டியிலே தமிழ் ஆசிரியராக இருந்த திரு. ஆர். சி. கதிர்காமர் குலேந்திரனுக்கு மிகுந்த ஒத்தாசை புரிந்தார். இவர் சிறிது காலத்தின் பின்னர் மறைந்து விட்டார். இத் தொண்டரின் ஞாபகார்த்தமாகக் குலேந்திரன் அளவெட்டி தேவாலயத்தில் ஒரு ஞாபகார்த்த நடு கல்லை ஏற்படுத்தினார்.

ஒவ்வொரு திருச்சபையிலும் சபைக் குருவுக்கு மிகுந்த ஒத் தாசை செய்கின்ற ஒருவரைக் காணலாம். தமது நீண்ட குருத்துவ வாழ்க்கையிலேயே திரு. ஆர். சி. கதிர்காமரைப் போல ஒரு அருந் தொண்டரைக் காண்பது அரிது என்று குலேந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார். நாளடைவில் சபா சங்கத்திற்கு எதிராக இருந்தவர்களும் ஆலயத்திற்கு வரத் தொடங்கினார்கள். திருச் சபை ஒற்றுமையாகச் செயற்பட்டது. குலேந்திரன் அளவெட்டி யில் இருந்த காலத்திலேதான் அவருடைய திருமணமும் நடை பெற்றது. இதனைப் பற்றிய விரிவான குறிப்புக்களை இல்லறம் என்ற அதிகாரத்திலே காணலாம்.

S.I.U.C. சபா சங்கத்தினர் நான்கு வருடத்திற்கு ஒரு முறை ஊழியரை மாற்றம் செய்வது என்ற விதியை ஏற்படுத்தினார்கள். எனவே 1935 ம் ஆண்டு அவர் அளவெட்டியினின்றும் பிரிய வேண்டியதாயிற்று.

சாவகச்சேரியில் அப்பொழுது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நிறுவப்பட்டிருந்தது. அதன் அதிபராக இருந்த ஜே. சி. அமர சிங்கம் குலேந்திரனின் நெடு நாளைய நண்பர். குலேந்திரனின் அறிவு, ஆற்றல்களை அறிந்து இருந்தார். அவருடைய முயற்சி யினால் குலேந்திரன் சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலேந்திரன் சாவகச்சேரிக்குச் சென்ற பொழுது அவருக்கு ஒரு பெரிய பொறுப்புக் காத்திருந்தது. ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை ஆளுநர் சபையின் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார். இந்தச் சபையே மாணவர்களின் அனுமதிக்குப் பொறுப்பாக இருந்தது. குலேந்திரன் சாவகச்சேரியில் இருந்த காலமெல்லாம், அதாவது நான்கு வருடங்கள் ஆளுநர் சபையின் செயலாளராக விருந்து அரும்பணி ஆற்றினுர்.

ஆசிரியர் கலாசாலை சாவகச்சேரியில் இயங்கு முன்னர் தெல்லிப்பளையிலே இயங்கி வந்தது. சாவகச்சேரியில் கலாசாலை இயங்குவதற்கு வேண்டிய கட்டிடங்கள் அமைக்கப்பட வேண்டி யிருந்தது. பழைய டிறிபேர்க் வளாகத்தில் அமைந்திருந்த தேவால யம் கலாசாலைக்கு வழங்கப்பட்டது. எனவே ஆராதனை நடாத்து வதற்குப் புதிய தேவாலயம் கட்டப்பட வேண்டியிருந்தது. புதிய தேவாலயத்தின் அத்திவாரம் 1933 ல் போடப்பட்டிருந்தது. எனினும் அது கட்டி முடிக்கப்படவில்லை. எனவே குலேந்திரன் இதைக் கட்டி முடிப்பதில் ஊக்கமாய் ஈடுபட்டார்.

1937 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ம் திகதி ஆலயத்தின் முற் பாகம் முடிக்கப் பெற்றுப் பிரவேச விழாக் கொண்டாடப்பட்டது. சாவகச்சேரியைச் சூழ நுணுவில், வரணி, குடத்தனை, உசன் ஆகிய திருச்சபைகளும் இருந்தன. இவைகளுக்கு எல்லாம் சாவகச் சேரி ஊழியனே சேகரப் போதகராக இருந்தார். இந்த இடங் களுக்கெல்லாம் துவிச்சக்கர வண்டியில் சென்று நற்கருணை ஆரா தனைகளை நடாத்தி வந்தார்.

குலேந்திரன் சாவகச்சேரியிலிருந்த காலத்தில் தென்னிந்தியாவி லிருந்து குறிப்பாக நாகர்கோயில் பகுதியிலிருந்து பாகவதர்களும் சாதுக்களும் வருவது பெரு வழக்காக இருந்தது. இவர்கள் தங்க ளுடைய பாட்டுத் திறமையினுல் சபையாரைப் பெரிதும் கவர்ந் தார்கள். ஆனுல் இவர்களிலே சிலர் இறையியல் ஞானம் அற்றவர் களாக இருந்தார்கள். சாவகச்சேரியில் மிட்டாய் விற்கின்ற ஒரு மலையாளத்தவன் இருந்தான். இவன் ஆரம்பத்தில் சீரியக் கிறிஸ் தவன். பின்னர் இந்துவாக மாறியிருந்தான். இவனைப் பாகவதர் குருமனைக்கு அழைத்தார். அவனைப் பார்த்துப் பாகவதர் கேட்ட கேள்வி. நீ பீடி புகைக்கிருயா? என்பதேயாகும்.

ஒரு முறை உடுவிலில் பிள்ளைகள் விழா நடைபெற்றது. குலேந் திரனும் சபையாரும் உடுவிலுக்குச் சென்று விட்டார்கள். அந்த நாளிலே வரவேண்டாமென்று ஒரு பாகவதற்குச் சொல்லியிருந் தார். பிள்ளைகள் விழா முடிந்து ஊழியனும் சபையாரும் சாவகச் சேரிக்குத் திரும்பினர். ஒரு Lorry மூலமாகவே பிரயாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்கள். வரும் வழியில் கோப்பாய்ச் சந்தியில் லொறியின் விளக்குகள் அணைந்து விட்டன. Torch Light இன் உதவியுடன் மிகுந்த பிரையாசப்பட்டுச் சாவகச்சேரி வந்துசேர்ந்தனர். அப்பொழுது குருமனையில் ஒரு பாகவதரும் அவருடைய மகளும் இருப்பதனைக் கண்டார்கள். குலேந்திரனுக்கு அவர்களைக் கண்டதும் பசிரென்றிருந்தது. இந்தப் பாகவதர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ இறையியலைப் பற்றிப் பேசாமல் யாழ்ப்பாணத்திற்கும் தமிழ் நாட்டிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் கேரளத்திற்கும் இடையேயிருந்த பழக்க வழக்கங்களைக் குறித்துக் கேட்பவர்கள் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்படி பேசினார்கள்.

சாவகச்சேரி ஊழியத்தின் போது திரு. ஜே. சி. அமரசிங்கம் அவர்கள் குலேந்திரனுக்கு மிகுந்த ஒத்தாசை புரிந்தார். குலேந்திரன் எங்கேயாவது சென்றிருந்தால் ஞாயிறு ஆராதனைகளை இவர் நடாத்தி உதவினார். குலேந்திரன் நற்கருணை ஆராதனைகளுக்காகச் சேகரத்திலிருந்த ஏனைய சிறு சபைகளுக்குப் போக வேண்டியிருந்தது. டிறிபேர்க் கல்லூரியின் அதிபராக இருந்த திரு. கே. எஸ். சரவணமுத்து அவர்களும், தமிழ்ப் பள்ளிக் கூடத்துத் தலைவராக இருந்த திரு. வி. வி. கந்தையா அவர்களும் சபை வேலையில் மிகுந்த உற்சாகமுடையவர்களாக இருந்தார்கள். திரு. வி. வி. கந்தையா அவர்கள் எல்லா விதமான வேலைகளையும் மன மகிழ்ச்சியுடன் செய்து கொடுத்தார்.

*1939* ம் ஆண்டு குலேந்திரன் ஏழாலைக்கு மாற்றம் பெற்றார் முதலிற் குலேந்திரனை உடுவில் திருச்சபைக்கே சபாசங்க நிர்வாகக் குழு மாற்றியிருந்தது. ஆனால் ஏழாலைக்கு மாற்றப்பட்டிருந்த வண. எஸ். ரி. ஆசீர்வாதம் அது தன்னுடைய ஊர் என்றும் அந்த இடத்திற்குத் தான் கடைசியாகவே போக விரும்புகின்றேன் என்றும் கூறினார். எனவே நிர்வாகக் குழு எஸ். ரி. ஆசீர்வாதம் அவர்களை உடுவிலிற்கு அனுப்பியது. குலேந்திரன் ஏழாலைக்குச் சென்றார். ஏழாலை வடக்குத் திருச்சபைக்கும் ஏழாலை தெற்குத் திருச்சபைக்கும் ஒரே ஊழியனையே நியமிப்பது வழக்கமாக இருந்தது. குலேந்திரன் ஒரு வருடம் வடக்கு ஏழாலையிலும் மறு வருடம் தெற்கு ஏழாலையிலுமாக மாறி, மாறி வாசம் செய்தார். வடக்கு ஏழாலையில் அவர் இருந்தபொழுது ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டது. அங்கிருந்த தமிழ்ப் பாடசாலையில் இருந்த ஒரு ஆசிரியையைப் பற்றிப் பேசுவதற்காகக் குலேந்திரன் பாடசாலையின் முகாமையாளரைச் சந்திக்கச் சென்றிருந்தார். உண்மையில் குலேந்திரன் அந்த ஆசிரியைக்குச் சார்பாகப் பேசவே முகாமையாளரிடம் சென்றிருந்தார். அந்த ஆசிரியையின் கணவரோ தாம் அவருக்கு விரோதமாகப் பேசச் சென்றார் என்று எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குத் தொல்லை கொடுத்தார். குருமனைக்கு வந்து தகாத வார்த்தைகளைப்பேசி கதிரை, மேசைகளை உடைத்தார். இதனால் குலேந்திரன் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டியதாயிற்று. ஆனால் அந்த ஆசிரியையின் கணவன் தனது செயலுக்கு மனம் வருந்திக் குலேந்திரனிடம் மன்னிப்புக் கூறினார். குலேந்திரன் அவரை மன்னித்து வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

வடக்கு ஏழாலையைச் சேர்ந்த வைரமுத்துச் சட்டம்பியார் குலேந்திரனுக்கு மிக ஒத்தாசையாக இருந்தார். இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் குலேந்திரன் வீட்டுக்கு நான்கு மாதமாகக் காவல் இருந்தார். ஒவ்வொரு இரவும் ஒரு கொடுவாள்க் கத்தியுடன் குருமனையில் படுத்துக் கொண்டார். இவ்வாறு ஊழியனுக்கு ஆபத்து ஏற்படாதவாறு காவல் புரிந்தார். ஒவ்வொருநாட் காலையிலும் ஊழியனுக்குத் தேவையான மரக்கறி வகைகளைக் கொண்டு வந்து கொடுத்தார். ஏழாலை தெற்கு ஆலயம் ஒரு சமயம் பெரு வெள்ளத்தினால் மிகுந்த பாதிப்புக்குள்ளானது. வழிபாட்டினை ஆலயத்திற்குள் நடாத்த முடியாமல் போய்விட்டது. எனவே ஒரு சபையான் வீட்டிலேயே ஞாயிறு காலை ஆராதனைகள் நடாத்தப் பெற்றன.

குலேந்திரன் எங்கு சென்றாலும் தமது சபையாருக்கு அரிய நிகழ்ச்சிகளை வழங்கத் தயங்கவில்லை. மீசாலையைச் சேர்ந்த டி. ஜி. பூதத்தம்பி என்ற ஆசிரியரை வரவழைத்து அவரைக் கொண்டு யோனாவின் சரித்திரத்தைக் கதாப்பிரசங்கமாகக் கூறும்படி செய்தார். யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த அறிஞர்கள், இறையியல் வல்லுநர்கள், இச்சபையில் பிரசங்கம் செய்தார்கள். வண. S. K. Bunker வண D. T. Niles வண R. C. P. Welch, J. V. Chelliah S. Selvaratnam ஆகியோர் பல்வேறு நிகழ்ச்சிகளில் சொற்பொழிவு ஆற்றினார்கள். தென்னிந்தியாவிலிருந்து வந்த சாது பீற்றரும் ஏழாலைத் திருச்சபையில் உபந்நியாசம் செய்தார்.

1941 ம் ஆண்டு குலேந்திரன் வட்டுக்கோட்டைக்கு மாற்றம் பெற்றார். அப்பொழுது அவர் சபாசங்கத்தின் நிர்வாக அலுவலராகவும் (Executive Officer) இருந்தார். 1942ல் அவருக்கு ஓர் உதவி ஊழியன் வழங்கப்பட்டார். புங்குடுதீவிலே ஊழியனாகவிருந்த வண. ஜே. பி. அம்பலவாணர் அவர்களே குலேந்திரனுக்கு உதவி புரியும்படி நியமிக்கப்பட்டார். ஆனால் இக்குரவர் குலேந்திரனுக்கு உதவியாளனாக ஓர் ஆண்டு பணிபுரியு முன்னரே இவ்வுலகவாழ்வை நீத்தார். வட்டுக்கோட்டை ஊழியனாகவும் நிர்வாக அலுவலராகவும் பணியாற்றுவது மிகவும் சிரமமாக இருந்தது. சில சபையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக அலுவலர் வட்டுக்கோட்டை திருச்சபைப் பொறுப்பை வகிப்பது கடினமானதென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.

அப்பொழுது வட்டுக்கோட்டை குருமனை இன்றைய Y. M. C. A. இல்லம் இருக்கும் இடத்தில் இருந்தது. திருச்சபையாரின் எண்ணங்களைக் குலேந்திரன் நன்கு புரிந்து கொண்டார். யாழ்ப்பாணக்கல்லூரியின் துணை அதிபராக இருந்த ஜே. வி. செல்லையா அவர்கள் குலேந்திரன் இரண்டு பதவிகளையும் பார்ப்பது சிரமம் என்று கூறினர். எனவே குலேந்திரன் வட்டுக்கோட்டையினின்றும் நீங்க முடிவு செய்தார். நிர்வாக அலுவலர் என்ற பதவியைச் சரிவரச் செய்வதற்கு அராலியே நல்ல இடமென்று எண்ணி 1943 ம் ஆண்டு அந்த இடத்துக்கு ஊழியனுகச் சென்றார். வண. எஸ். செல்வரத்தினம் வாலிபனுக இருந்த காலத்தில் கட்டப்பட்டிருந்த இந்த வீட்டிற்கு Miracle என்பது பெயர். அராலி ஊழியத்தின் போது திரு. துரையப்பா, திரு. விக்டர் போல், திரு. மயில்வாகனச் சட்டம்பியார் ஆகியோர் குலேந்திரனுக்கு அருந்துணை புரிந்தார்கள். குலேந்திரன் அராலியில் ஊழியனுக இருந்த காலத்திலேதான் அதாவது 1947 ம் ஆண்டு அவர் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் பேராயராகத் தெரிவு செய்யப்பட்டார். அராலித் திருச் சபைப் பொறுப்புக்களை அவர் இன்னெரு ஊழியனிடம் கையளித்தார். எனினும் தொடர்ந்து அராலியிலேயே வாழ்ந்து வந்தார்.

பேராயர் பதவியேற்ற குலேந்திரன் அவர்கள் சாவகச்சேரியைத் தவிர வேறு பெரிய திருச்சபைகளில் பணியாற்றவில்லை. இது அவருக்கு மிகுந்த சந்தோஷத்தையே அளித்தது. பெரியசபைகளிலே பெரிய உத்தியோகத்தர்களும் பெரிய செல்வந்தர்களும் இருந்தார்கள். சிறிய சபைகளிலே பெரும்பாலும் தமிழாசிரியர்களும் விவசாயிகளும் இருந்தார்கள். இறுதிவரை இவர்கள் குலேந்திரனையே தமது மார்க்க சகாயராகக் கண்டனர். எவ்வித கிலேசமுமின்றிப் பேராயருடன் மனந் திறந்து பேசினர். வேண்டிய உதவிகளை நேரடியாகக் கேட்டனர். இது தமக்குத் திருப்தியளிக்கும் விஷயம் என்றார் குலேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னிந்திய திருச்சபை யாழ் மறை மாவட்ட வைத்திய பரிபாலனக் குழு. பேராயர் குலேந்திரன் முன் வரிசையில் வலது கோடியில் இருக்கின்றூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் 6

# இல்லறம்

வாழ்க்கையில் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நல்லவர்களாக வாய்த்து விட்டால் அது பெரிய செல்வம்தான். அது வாய்ப்பது அருமை. அது வாய்க்காவிட்டாலும் குடும்பத்தில் வாழ்க்கைத் துணை நல்லபடி வாய்த்து விட்டால் அது போதும். உலக வாழ்க்கையில் அரைப்பங்குக் கவலை தீர்ந்து விடும். அதற்கு அடுத்தபடி பிறக்கும் மக்கள் நல்லவர்களாக வாய்த்து விட்டால் முக்கால் பங்கு கவலை தீர்ந்தது எனலாம்.—மு. வரதராசா.

குலேந்திரனின் இல்வாழ்க்கை 1934 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ம் திகதி ஆரம்பமானது. அளவெட்டியில் மதகுருவாயிருந்த சபாபதி குலேந்திரனைத் திருவளர் செல்வி அலிஸ் மதுரம்மா விசுவலிங்கம் கைப்பிடித்தார். இந்த விவாக ஆராதனையை வண. R. C. P. Welch அவர்களே நடாத்தி முடித்தார்.

குலேந்திரன் திருமணம் செய்து கொண்டபொழுது அவருக்கு வயது 34. யாழ்ப்பாணத்தில் அப்பொழுது பெரும்பாலும் 24, 25 வயதிலேயே ஆண்கள் திருமணம் செய்து கொண்டார்கள். குலேந்திரன் இறுதி மட்டும் பிரமச்சாரியாகவே இருந்து சமயப் பணி செய்ய விரும்பியவர். துறவியலில் அவருக்கு நாட்டம் வந்தது ஏன் என்று தெரியவில்லை. சமயப் பணியில் ஈடுபட விரும்பியமையால் பிரமச்சாரியாகவே இருக்க விரும்பினேன் என்று அவர் கூறினர். துறவு உள்ளம் சமயப் பணியை நாடியதா அல்லது சமயப் பற்று துறவை நாடியதா ஆராய்வுக்குரிய விஷயம். திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்க்கையை வெறுத்ததினல் சமண சமயத்தை நாடினரா அல்லது சமண சமயத்தில் சேர்ந்தமையால் அவர் வாழ்க்கையில் வெறுப்புற்ருரா என்று கூற முடியாது இருக்கின்றது. குலேந்திரனிடத்து சமயப் பற்றும் துறவுச் சிந்தனையும் எங்கே ஏற்பட்டனவென்று கண்டு கொள்ளலாம். பல்கலைக்கழகக் கல்லூரியென்னும் உயர் கலா பீடத்தில் கற்று முடிந்தபின் அவர் உள்ளத்தில் இவ்வுணர்ச்சிகள் தோன்றின. ஆனல் 1934 ம் ஆண்டு சடுதியாக மண வாழ்வுக்குள் புகுந்தார். இதற்கு அவருடைய சகோதரியே காரணம் என்று கூறினர். சகோதரியாகிய சந்திரப்பிரபை திருமணம் செய்ய வேண்டியிருந்தது. எனவே குலேந்திரன் மாற்றுச் சடங்குக்கு உடன்பட வேண்டியதாயிற்று. சந்திரப்பிரபையை அலிஸ் மதுரம்மாவின் சகோதரர் மணம் புரிந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலேந்திரனின் இல்லறம் இவ்வாறு ஆரம்பித்தது எனினும் அது நல்லறமாகவே நடைபெற்று வந்தது. அலிஸ் மதுரம்மா பெற்றோரை இழந்தவராகவிருந்தார். எனவே குலேந்திரன்மீது மட்டற்ற பாசமும் பேரன்பும் கொண்டிருந்தார். ''காதல் ஒருவனை கைபிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து மாதரறங்கள் பழைமையைக் காட்டிலும் மாட்சிமை செய்து வாழ்வமெடி'' என்ற பாரதியாரின் கருத்திற்கேற்பக் கணவனுக்கு எல்லாக் காரியங்களிலும் கைகொடுத்தார்.

அலிஸ் மதுரம்மா வீட்டுப் பொறுப்புக்களெல்லாம் தானே கவனித்துக் கொண்டு குலேந்திரனை இலக்கியச் சோலையில் உலாவ விட்டார். குடும்பத்தின் சகல கருமங்களும் Income Tax, Insurance, fees நிர்வாகம் எல்லாவற்றையுமே அவர் கவனித்துக் கொண்டார். குலேந்திரன் முக்கியமான கூட்டங்களுக்குச் செல்லும்பொழுதெல்லாம் தான் பேசவேண்டிய பேச்சை மாத்திரம் ஆயத்தம் செய்வார். மற்ற எல்லாக் கருமங்களையும் அம்மையாரே கவனித்துக் கொள்வார். குலேந்திரன் மோட்டார் ரதத்தில் ஏறிச் சொற்பொழிவை நிகழ்த்திவிட்டு நிம்மதியாக வந்து விடுவார். சகல கருமங்களும் முன்னெச்சரிக்கையுடன் மதுரம்மா கவனித்துக் கொள்வார்.

குலேந்திரன் சாவகச்சேரியில் ஊழியனாக இருந்த போது அவரது மூத்த மகள் கருணாநிதி பிறந்தார். இவர் 1935 ம் ஆண்டு கிறிஸ்மஸ் நாளுக்கு அடுத்த நாள் அதாவது டிசம்பர் 26 ம் நாள் தோன்றினர். இதனால் கருணாநிதி பிறந்த நாளன்றும் அதற்கு முந்திய நாளன்றும் கரோல் பாடல்கள் ஆலயத்திலும் வீடுகளிலும் பாடப்பட்டன. குலேந்திரன் ஓரிடத்தில் தனது பிறந்த நாளைக் கௌரவிக்கும் முகமாகவே இந்தப் பாடல்கள் பாடப் பெற்றன என்று கருணாநிதி சிறு வயதில் எண்ணிக் கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். கருணாநிதி பெரியவளாகித் தனது மனத்திற்கிசைந்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். அவருடைய கணவருக்கு இரத்தினராசா என்பது பெயர். இவர்களுக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தார்கள். குலேந்திரனின் மனைவி அலிஸ் மதுரம்மா 1974 ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அந்த நாட் தொட்டுக் குலேந்திரன் கருணாநிதி என்ற மகளுடனேயே வசித்து வந்தார்.

1940 ம் ஆண்டு பெப்பிரவரி 23 ம் திகதி அவருக்கு மகன் ஒருவன் பிறந்தான். மகன் பிறந்த சம்பவம் தனது வாழ்க்கையில் மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியதொன்று என்று குலேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். மகனுக்கு தயாநிதி என்று பெயர் வைத்தார். இவர் யாழ்ப்பாணக்கல்லூரியிலே கற்றுப் பி.ஏ. (இலண்டன்) பட்டதாரியாகி ஆசிரியர் தொழிலில் அமர்ந்தார். இவர் பிரபல வழக்கறிஞராகிய இராசதுரை அவர்களின் மகளைத் திருமணம் புரிந்தார். இவருக்கு ஓர் ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தார்கள். தயாநிதி இப்பொழுது மாலைதீவில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

குலேந்திரனின் கடைசிப் பிள்ளையாகிய அனுக்கிரஜோதி 1945 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் திகதி பிறந்தார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று அரங்கேறினார். பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரஞ்சு கலாச்சார நிலையத்தில் பணியாற்றினார். சாவகச்சேரியை சேர்ந்த ஏசுதாசன் என்பவரின் புத்திரியைத் திருமணம் செய்து கொண்டார். தற்பொழுது பிரான்சில் வசிக்கின்ற அனுக்கிரக ஜோதி 1988 ம் ஆண்டு தனது மனைவியை இழந்தார். இவருக்கும் ஓர் ஆண் பிள்ளையும் பெண் பிள்ளையும் உண்டு.

குலேந்திரன் மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனாக இருந்த பொழுதிலும் குடும்பத்தில் அதிக நேரத்தைச் செலவிடவில்லை. நூல்களை எழுதுவதிலும், வாசிப்பதிலுமே கண்ணுங் கருத்துமாக இருந்தார். பிள்ளைகள் படிப்பில் குறைவாயிருந்தால் அவர்களுக்கெனப் பிரத்தியேக ஆசிரியர்களை ஒழுங்கு செய்தார். இந்தப் பிரத்தியேக ஆசிரியர்கள் தமது பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவில்லையேயென ஏங்கினார். குலேந்திரன் தனது பிள்ளைகளின் விஷயத்தில் பற்றற்றவராகவே காணப்பட்டார். தமது செல்வாக்கை உபயோகித்து ஒரு புலமைப் பரிசிலையோ உத்தியோகத்தையோ தேடிக் கொடுக்க விரும்பியதில்லை. நண்பர்கள் அப்படிச் செய்யுங்கள் என்று ஆலோசனை கூறினால் ''அப்படிச் செய்தால் சாயம் கழண்டுதே'' என்று கூறிக் கொள்வார்.

பிள்ளைகள் விஷயத்தில் மட்டுமன்றித் தமது உறவினர்கள் விஷயத்திலும் இந்த நெறியையே கடைப்பிடித்து வந்தார். தமது உறவினர் சபா சங்கத்தில் ஏதாவது உத்தியோகம் தேடி வந்தால் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறி விடுவார். சிறுசிறு விஷயங்களிலும் நீதி தவறாமல் நடந்து கொள்ளவே அவர் விரும்பினார். நூலாராய்ச்சியிலும், இறை பக்தியிலும் பெரிதும் நாட்டம் கொண்டிருந்த குலேந்திரனுக்கு உணவு, உடை என்ற விஷயங்களில் சிறிதளவேனும் ஆர்வம் இருக்கவில்லை. ''கண் முன் நின்றது புசிப்பார்'' என்ற கொள்கைக்கேற்பத் தனக்கு முன்னாலே வைக்கப்பட்ட உணவை உண்டு விட்டுப் போய் விடுவார். உணவு சரியில்லையென்று அவர் எந்த நாளும் குறைபட்டுக் கொண்டது கிடையாது. அவர் வீட்டில் உணவு சிறந்த முறையில் இல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தாலும் அவர் அதனை அறியாதவராகவே இருந்தார். உடை விஷயத்திலும் மிகவும் எளிமையானவராகவே காணப்பட்டார். நல்ல உடைகளைக் கொடுத்தால் ''உதை ஏன் எனக்கு'' என்று கேட்டுக் கொள்வார். மிகுந்த எளிமையான கட்டிலில் படுத்து உறங்குவார். குளிர் காலத்தில் போர்த்துக் கொள்வதற்கென ஒரு கம்பளிப் போர்வையும் போட்டுக் கொள்வதற்கென ஒரு கம்பளிச் சட்டையும் வைத்திருந்தார். குலேந்திரன் எப்பொழுதும் சாந்தகுணமுள்ளவராகவே இருந்தார். எத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளிலும் அவர் குளிர்ந்த வார்த்தையையே கூறுவார். தனது குடும்பத்தில் கஷ்டங்கள், நஷ்டங்கள் ஏற்பட்டால் சிறிதளவேனும் கவலைப்படவே மாட்டார். தனக்கு ஏற்படுகின்ற துன்பங்களைக்கூடப் பார்த்துச் சிரிக்கக்கூடிய தத்துவ ஞானியாக அவர் விளங்கினர். அவருடன் யாராவது கோபித்துக் கொண்டால் அந்தக் கவலைகளையெல்லாம் தனது உள்ளத்திலேயே அடக்கிக் கொள்வார். அவரோடு கோபிப்பவர் குலேந்திரனிடம் திரும்பச் சென்று பேச முற்பட்டால் குலேந்திரன் முன்னர் ஏற்பட்ட மனஸ்தாபத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லமாட்டார். அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றதாக அவர் கருதமாட்டார். ''நன்றன்று அன்றே மறப்பது நன்று'' என்பதனைக் குலேந்திரன் தனது நடத்தையால் போதித்தார்.

பேராயராக வந்தபின் அவருக்கு மோட்டார் ரதம் கிடைத்தது. 1970 ம் ஆண்டு அவர் பேராயர் பதவியிலிருந்து இளைப்பாறிய போது அந்த வாகனத்தையும் திரும்பக் கையளித்தார். பின்னர் பொது மக்களுக்கான பிரயாண வசதிகளையே உபயோகித்தார். நண்பர்கள் துவிச்சக்கர வண்டிகளிலும் ஸ்கூட்டர் வண்டிகளிலும் அவரைக் கூட்டிச் சென்றூர்கள். தொண்ணூறு வயதிலும் இந்த இரண்டு சில்லு வாகனங்களில் கெம்பீரமாக அமர்ந்திருந்தார்.

குலேந்திரன் வீட்டுக்கு வருபவர்களை அன்புடன் உபசரித்துப் பேசுவார். எல்லோரையும் மிகுந்த மரியாதையுடன் நடத்துவார். எத்தகைய ஊழியனும் எந்தவிதமான தயக்கமுமின்றி அவருடன் ஒரு நண்பனுடன் பேசுவது போலப் பேசுவார்கள். குலேந்திரனிடம் ஏழை மக்களுக்கு அள்ளி வழங்கச் செல்வம் இருக்கவில்லை. ஆனுல் அறிவுச் செல்வம் அதிகம் இருந்தது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுபவர்கள், பத்திரிகையாளர், இறையியல் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அவரைச் சந்திக்க அடிக்கடி வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அறிவாகிய செல்வத்தை முகம்கோணுது வாரி வாரி வழங்கினுர். பலர் குலேந்திரனின் தயாள சிந்தையைச் சாதகமாக்கி விலை மதிக்க முடியாத புத்தகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடமிருந்து இரவலாகப் பெற்ற பின்னர் திருப்பிக் கொடாமல் போனதும் உண்டு. ஆனல் குலேந்திரன் அவர்களைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

குலேந்திரன் தமது முதிர் வயதில் மகளுடனும் பேரப் பிள்ளைகளுடனும் வசித்து வந்தார். அப்பொழுதுதான் அவருடைய முக்கியமான நூல்கள் வெளிவந்தன. வீட்டில் பேரப்பிள்ளைகளினுலும், பேரப்பிள்ளகளின் நண்பர்களினுலும் பெரிய இரைச்சல் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். ஆனல் அவை ஒன்றும் குலேந்திரனின் வாசிப்பையோ எழுத்தையோ எள்ளளவும் பாதிக்கமாட்டா. அவருடைய சிந்தையெல்லாம், பேச்செல்லாம் நூலைப்பற்றியனவே. தாம் எழுதுகின்ற பேனவோ கடதாசியோ காணமற்போனலும் அவர் சிறிதளவேனும் கவலைப்படமாட்டார். வேறு எங்கிருந்தாவது ஒரு பேனையைக் கண்டு பிடித்துத் தனது கட்டுரையைத் தொடர்ந்து எழுதுவார்.

உடம்மை ஓம்புதல் குலேந்திரனின் சிறந்த பண்புகளில் ஒன்று. உணவு விஷயத்தில் மிகவும் கண்டிப்பு உள்ளவராக இருந்தார். எத்தகைய சுவையான உணவாக இருந்தாலும் தமது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கண்டால் உட்கொள்ள மாட்டார். தமது உணவுக் கோப்பையில் அது காணப்பட்டாலும் அதனை எடுத்துக் கொண்டுபோய் விடும்படி கூறுவார். இனிப்புப் பண்டங்கள் அவருக்குப் பிடித்தமானவை. ஆனல் அவற்றையும் அளவுக்கு மிஞ்சி உண்ண மாட்டார். வைத்திய நூல்களை ஆழ்ந்து கற்று உடம்பை எப்பொழுதும் நல்ல முறையில் வைத்துக் கொள்ளுவார். காலை எழுந்ததும் பதினைந்து நிமிடம் தேகாப்பியாசங்கள் செய்வது வழக்கமாகும்.

தொண்ணூறு வயதிலும் அவர் இந்த அப்பியாசங்களை விட்டு விடவில்லை. பின்னர் ஆறு கிளாஸ் தண்ணீர் குடிப்பார். அதற்குப் பின்னர் பிரார்த்தனை ஆரம்பமாகும். பிரார்த்தனை ஏறத்தாழ ஒரு மணி நேரம் நடைபெறும். கண் பார்வை பெருமளவிற்கு மங்கி விட்ட காரணத்தினுல் தனது பேரப்பிள்ளைகளில் ஒருவரைக் கொண்டு வாசிக்கும்படி செய்வார். பிரார்த்தனை நேரத்தில் ஒருவரும் அவருடன் பேச முடியாது. எத்தகைய பெரிய உத்தியோகத்தனுலும் பிரார்த்தனை முடிந்த பின்பே அவருடன் பேச முடியும். இவ்வாறு சில திட்டவட்டமான கொள்கைகளுடன் தமது வாழ்க்கையை நடாத்தி வந்தார். அவரது மனைவி மறைந்து 14 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. அவருடைய முக்கியமான நண்பர்கள் சகபாடிகள் அனைவரும் திரைக்கு அப்பாலே சென்று விட்டார்கள். குலேந்திரன் தொண்ணூறு வயதிலும் ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தார். அதற்கு காரணம் அவரது கொள்கைப் பிடிப்பும் மன உறுதியுமே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் 7

# பேராயர்

குலேந்திரன் அவர்கள் குருத்துவ ஊழியத்துக்குப் புகுந்த பொழுது அவர் மாத்திரமே பீ.ஏ. பட்டதாரியாக விளங்கினர். முன்னர் மதகுருவாக இருந்த வண. ஜே. கே. சின்னத்தம்பி 1931 ல் மறைந்து விட்டார். யாழ்ப்பாணக் கிறிஸ்தவ மக்கள் குலேந்திரனின் பெருமையை நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

அமெரிக்க மிஷனரிமார் ஆரம்பித்த திருச்சபைகள் சபை ஆளுகை முறையைக் கொண்டதாக விளங்கியது. புரட்டஸ்தாந்து திருச்சபையில் மூன்று வகையான நிருவாக முறைகள் காணப் படுகின்றன. அவையாவன பேராயர் ஆளுகை (எப்பிஸ்கோப்பல்). மூப்பர் ஆளுகை (பிறெஸ்பிட்டீரியன்) சபைஆளுகை (கொங்றி கேஷனலிஸ்ட்). இத்தகைய சபை ஆளுகை முறைகளிற் ''கொங் றிகேஷனல்'' அமைப்பே கூடுதலான சனநாயகப் பண்பு கொண்டு விளங்குகின்றது. ஆனல் ஒவ்வோர் ஆளுகை முறையைச் சார்ந்தவ ர்களுந் தமது முறையே இயேசு கிறிஸ்துவினல் ஏற்படுத்தப்பட்ட முறை என்று வாதாடுவர்.

நாளடைவில் அமெரிக்க மிஷன் திருச்சபைகள், சபை ஆளுகை முறையென்ற அமைப்பின் பண்புகளை விடுத்து மூப்பர் ஆளுகையின் பண்புகளைப் பெற்றுக் கொண்டன. 1904 ம் ஆண்டு இலங்கை கொங்கிறிகேஷனல் கவுன்சில் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட் டது. 1905 ம் ஆண்டில் இந்த அமைப்புத் தென்னிந்தியாவிலே தோன்றிய ஏனைய கொங்கிறிகேஷனல் அமைப்புகளுடன் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தியது. 1909 ம் ஆண்டில் கொங் கிறிகேஷனல் அமைப்புத் தென்னிந்தியாவிலிருந்த மூப்பர் ஆளுகை அமைப்புக்களுடன் (பிறெஸ்பிட்டீரியன்) சேர்ந்து தென்னிந்திய ஐக்கிய சபை (S. I. U. C.) ஆயிற்று. யாழ்ப்பாணத்திலிருந்த அமெ ரிக்க மிஷன் சபைகள் தென்னிந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பா ணச் சபா சங்கம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு படிப்படி யாகச் சபை ஆளுகை மாறி மூப்பர் ஆளுகை முறைக்குள் கிறிஸ்தவ சாகியம் சென்று கொண்டிருந்தது. அமெரிக்க மிஷன் சபைகள் 1940 ம் ஆண்டு தமக்கென ஒரு நிர்வாக உத்தியோகத்தரை நியமிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டது. (Executive Officer) இது மூப்பர் ஆளுகை முறை வளர்ச்சியில் முக்கிய மான கட்டமாகும். எனவே இந்த திருச்சபைக்கு இபபொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



47 வயது நிறைந்த தென்னிந்திய திருச்சபை
யாழ் மறை மாவட்டப் பேராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தலைவர்கள் தேவைப்பட்டனர். ஒருவர் சபாசங்கத் தலைவர். மற்றையவர் நிர்வாக உத்தியோகத்தர்.

1940 ம் ஆண்டின் முற்பகுதியிலேயே தென்னிந்திய ஐக்கிய சபையின் யாழபாணசபாசங்கம் தனது வருடாந்தக் கூட்டத்தை நடாத்தியது. இந்தக் கூட்டத்திலே சபா சங்கத்தின் தலைவரையும், நிர்வாக உத்தியோகத்தரையும் தெரிவு செய்ய வேண்டிய பணி இருந்தது. தலைவர் பதவிக்குக் குலேந்திரன் வழமை போல வணக்கத்துக்குரிய R. C. P. Welch அவர்களுடைய பெயரைப் பிரேரித்தார்.

அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒருவர் வண. R. C. P. Welch அவர்கள் ஏற்கனவே நிர்வாக உத்தியோகத்தராக விளங்குகின்றார். எனவே வேறு யாராவது ஒருவர் தலைவராக இருக்க வேண்டுமென்று சொல்லி, இன்னொருவர் பெயரைப் பிரேரித்தார். அப்பொழுது குலேந்திரன் R. C. P. Welch தவிர அவர்கள் வேறொருவருமே சபா சங்கத்தின் தலைவராக இருக்கக் கூடாது என்று துணிந்து தனது பிரேரணையில் உறுதியாக நின்றார். ஆனால் அப்பொழுது சிலர் இன்னொருவரைச் சபா சங்கத்தின் தலைவராக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர். அதனால் குலேந்திரன் வேறு வழியின்றி மிகுந்த தயக்கத்துடன் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். வண. R. C. P. Welch நிர்வாக உத்தி யோகத்தராகவும், வண. குலேந்திரன் சபா சங்கத்தின் தலைவராகவும் அமர்ந்து சபை கருமங்களைத் தக்க முறையில் நடாத்தி வந்தனர். ஆனால் 1942 ம் ஆண்டு வண. R. C. P. Welch அவர்கள் சடுதியாக மூளையில் ஏற்பட்ட இரத்தப் பெருக்கின் காரணமாக மறுமைக்குள் பிரவேசித்தார். வண. குலேந்திரன் நிர்வாக உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த முறையில் சிறிதுசிறிதாக குலேந்திரன் அவர்கள் யாழ்ப்பாண சபா சங்கத்தின் தனி நாயகனாக உயர்ந்து வந்தார். இப்பொழுது சபா சங்கத்தின் தலைவர் என்ற பொறுப்பினையும் நிர்வாக உத்தியோகத்தர் என்ற பொறுப்பினையும் இவரே கவனித்து வந்தார்.

இக்காலகட்டத்திலேதான் தென்னிந்திய திருச்சபைகளின் ஐக்கியம் என்ற இயக்கம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. தென்னிந்தியாவிலே அங்கிலிக்கன் கிறிஸ்தவர்களும் மெதடிஸ்த கிறிஸ்தவர்களும், பிரஸ்பிட்டேரியன் கொங்கிரிகேஷனல் கிறிஸ்தவர்களும் ஒன்று கூட்டுவதற்கான ஆயத்தங்கள் திருச்சபையின் நிபுணர்களினாலே மேற்கொள்ளப்பட்டு வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய திருச்சபையின் ஐக்கிய சபா சங்கமும் (SIUC) இந்தத் திருச்சபையிலே சேர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தென்னிந்திய ஐக்கிய திருச்சபையில் (SIUC) 8 சபா சங்கங்கள் இருந்தன. 6 சபா சங்கங்கள் தென்னிந்திய திருச்சபை (C.S.I.) ஒரு மைப்பாட்டை ஆதரிக்க வேண்டியிருந்தது. தென்னிந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த மூன்று சபா சங்கங்கள் இந்த ஐக்கியத்தில் சேரு வதற்கு மிகுந்த ஆர்வம் உடையனவாகக் காணப்பட்டன. திருவா ங்கூர் தெற்கும், வட தமிழ் நாடும் இந்த ஐக்கிய திட்டத்தைப் பலமாக எதிர்த்தன. யாழ்ப்பாண சபா சங்கத்தின் நிலைப்பாடு மிக வும் அவசியமாக இருந்தது. யாழ்ப்பாணத்தின் ஆதரவு இல்லாமல் சபாசங்கங்களின் ஆதரவு கிட்டுவது அரிது. யாழ்ப்பாணச் சபா சங்கம் ஐக்கிய ஏற்பாட்டினை எதிர்த்தால் தென்னிந்திய ஐக்கியச் சபை இந்த ஒருமைப்பாட்டுக்குள் செல்வது கடினமாகிவிடும். ஏனெனில் மூன்று சபா சங்கங்கள் சார்பாகவும் 3 சபா சங்கங்கள் விரோதமாகவும் அமைந்து விடும். வட்டுக்கோட்டையில் தென் னிந்திய ஐக்கியச் சபையின் மகாநாடு நடை பெற்றபோது வண. B.C.D. மேதர் ஒருமைப்பாட்டுக் குழுவில் அங்கத்துவம் பெற்றி ருந்தார். அவர் அந்தக் கூட்டத்திலே ஐக்கிய ஏற்பாட்டிற்குத் தமது பூரண ஆதரவைத் தெரிவித்திருந்தார். அக் கூட்டத்திலே கலந்து கொண்ட குலேந்திரன் வேட்டியும், சால்வையும் அணிந்து ஒரு தமிழாசிரியரைப் போலக் காணப்பட்டார். அந்த ஒருமைப் பாட்டுக் கூட்டத்திலே வண. B.C.D. மேதருடைய கருத்துக்களை வண. குலேந்திரன் மறுத்துப் பேசினார். இதனால் சினமடைந்த தென் திருவாங்கூர் பிரதிநிதி வண. ARNOLD LEGG வண. B.C.D. மேதரை எதிர்த்துப் பேசும் இந்தத் தமிழ் ஆசிரியர் யார் என்ற தோரணையில் குலேந்திரனைப் பார்த்தார். வண. குலேந் திரன் விட்டுக் கொடுக்கவில்லை. தமது சபா சங்கத்தினைச் சேர்ந்த ஒவ்வொரு உள்ளூர் சபையும் ஐக்கிய ஏற்பாட்டினை ஏற் றுக் கொண்டாற்றான் தாம் இந்த ஏற்பாட்டுக்கு சம்மதம் தெரி விக்க முடியும் எனக் கூறிவிட்டார். அடுத்து நடைபெற்ற யாழ்ப்பாண சபா சங்கத்துக் கூட்டத்தில் திருச்சபை ஒற்று மைத் திட்டம் பிரஸ்தாபிக்கப்பட்டது. அக்கூட்டத்திலே கலந்து கொண்ட பிரதிநிதிகளில் ஒருவரைத் தவிர எல்லோரும் தமது சபைகள் ஒருமைப்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவாக இருக்கின் றனர் என்று கூறினார்கள். ஆனால் மூளாய்த் திருச்சபைப் பிரதிநிதியாக வந்து இருந்த திரு. எஸ். கே. கந்தையா மாத்திரம் தமது திருச்சபைக்கு அத்திட்டத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்றும் ஆனால் சபா சங்கத்தின் தீர்மானங்களை அவர்கள் முழு மனதோடு ஏற்றுக்கொள்வார்கள் என்றும் கூறினார். ஆனால், குலேந்திரன் அப்படிக் கூற முடியாது. மூளாய்த் திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1947 ல் பதவியேற்ற தென்னிந்திய திருச்சபைப் பேராயர்கள். சபாபதி குலேந்திரன்
பின்வரிசையில் இடமிருந்து ஏழாவதாக நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு அளிக்கின்றதா இல்லையா என்று குறிப்பிட வேண்டும் என்ருர். அப்பொழுது மூளாய் சபைப்பிரதிநிதி திரு. எஸ். ஜே கந்தையா அதனைத் தாம் தமது சபையாரிடம் கேட்டுத் தெரிந்து தான் வந்து கூற வேண்டும் என்ருர். எனவே அந்த சபா சங்கக் கூட்டத்தில் ஒருமைப்பாட்டுக்குச் சகல திருச்சபைகளும் ஒப்புதல் அளிக்கவில்லை என்ற முடிவு செய்யப்பட்டது. மூளாய் திருச்சபை யினரின் ஒப்புதலுக்காகத் தீர்மானம் தள்ளி வைக்கப்பட்டது. இதனுல் யாழ்ப்பாண சபா சங்கத்தினுடைய ஒப்புதல் உடனடி யாகக் கிடைக்காமல் போகவே S. I. U. C. இன் உடன்பாட் டிற்காக ஒருமைப்பாட்டு இயக்கம் ஒரு வருடம் காத்து இருக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு திரு. எஸ். கே. கந்தையா அவர் கள் தென்னிந்தியத் திருச்சபை வரலாற்றிலே ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார் என்று குலேந்திரன் மிகுந்த சிரிப்புக்கி டையில் கூறியுள்ளார். 1946 ம் ஆண்டு சபை ஒற்றுமைத் திட்டம் ஓரளவிற்குப் பூரணத்துவம் அடைந்தது. "AT LAST" என்று சபையின் ஒருமைப்பாட்டு நிபுணர்கள் வெற்றி பெருமூச் சுவிட்டார்கள். 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் 27 ம் திகதி சென் னையிலுள்ள St. George's பேராலயத்தில் தென்னிந்திய திருச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அப்பொழுது அதில் அங்கத் துவம் பெற்ற ஒவ்வொரு சபையினரும் தமது அங்கீகாரத்தை வாசி த்தனர். தென்னிந்தியத் திருச்சபை என்ற மகோன்னத அமைப்பு உருவானது. இதனைத் தொடர்ந்து 8 புதிய அத்தியட்சகர்கள் அபிடேகம் பண்ணப் பட்டனர். குலேந்திரன், லெஸ்லி நியுபிகின் LEGG குருசாந்தா THORP என்பவர்கள் புதிதாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்.

புதிதாக அபிஷேகம் பண்ணப்பட்ட அத்தியட்சகர் குலேந்திரன் சென்னையில் சில நாட்கள் கிண்டியைச் சேர்ந்த சாமுவேல் போல் என்பவர் வீட்டிலே தங்கினுர். இவர்கள் தம்மையும் தம் மனைவி யையும் மிகுந்த அன்பாக உபசரித்தார்கள் என்றும் கிண்டியிலே மிகுந்த மகிழ்ச்சியாகத் தமது காலம் கழிந்தது என்றும் குலேந் திரன் அவர்கள் கூறியுள்ளார். அக்டோபர் மாதம் 8 ம் திகதி வரை கிண்டியிலே தங்கியிருந்து விட்டு ஒக்டோபர் 9 ம் திகதி ரயில் மார்க்கமாக யாழ்ப்பாணம் திரும்பினுர். ரயில் மார்க்கமாக வந்தபொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு புகையிரத ஸ்தானங்களிலும் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அக் டோபர் 10 ம் திகதி காலை 6 மணியளவில் புகையிரதம் சாவகச் சேரி புகையிரத நிலையத்தை அடைந்தது. சாவகச்சேரித் திருச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையார் புகையிரத நிலையத்தில் கூடி மிகுந்த மகிழ்ச்சியுடன் தமது அத்தியட்சரை வரவேற்றூர்கள். யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலே மிக உற்சாகமான வரவேற்பு அவருக்குக் காத்திருந் தது. யாழ்ப்பாணத்து முக்கிய பிரமுகர்கள் புகையிரத நிலையத் திலே கூடி அத்தியட்சரை வரவேற்றூர்கள்.

யாழ்ப்பாண சபா சங்கத்தின் செயலாளராக இருந்த வணக்கத்துக்குரிய B. C. D. மேதர் அத்தியட்சரைச் சபையிலே ஏற்றுக் கொள்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச்செய்து கொண்டி ருந்தார். வட்டுக்கோட்டை பேராலயம் மக்களால் நிறைந்து காணப்பட்டது. ஆலயக் கதவு மூடப்பட்டிருந் தது. ஆங்கிலேயத் திருச்சபை மரபின்படி அத்தியட்சர் தமது ஆதீனத்தைப் பொறுப் பேற்றூர். ஆலயத்தின் கதவில் மூன்றுதரம் தட்டினூர். அப்பொ ழுது செயலாளர் என்ன வேண்டுமெனக் கேட்டார். அப்பொ ழுது பேராயர் இந்த ஆதீனத்தின் அத்தியட்சகராகச் சட்டபூர் வமாக நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் அதனைப் பொறுப்பேற்க விரும்புகிறேன் என்று கூறினூர். அப்பொழுது உள்ளே வரும்படி அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதுவே தமது வாழ்வின் உச்சக் கட்டமாக அமைந்தது என்று குலேந்திரன் கூறியுள்ளார். அதன் பின்னர் ஊழியர்கள் யாவரும் அத்தியட்சகர்களுக்கு விசுவாசமாக இருப்போமென்று உறுதி கூறினூர்கள். இவ்வாறு 1947 ம் ஆண்டு அத்தியட்சகராக அமர்ந்த குலேந்திரன் 23 வருடங்கள் தமது பணியைச் செவ்வனே செய்து வந்தார். இவர் அத்தியட்சகராக இருந்த காலத்தில் ஆதீனத்திலே பல முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரை காலமும் சபை யார் சபை ஆளுகை முறை என்ற (CONGREGATIONALIST) திருச்சபை ஆளுகை முறையையே அறிந்திருந்தனர். இப்பொழுது அத்தியட்சர் ஆளுகை முறையை அங்கு கொண்டு வர வேண்டிய தாக இருந்தது. சபை ஆளுகை முறையின் சுதந்திர உணர்வினை யும் தாராளாண்மையும் எந்த விதத்திலும் பாதிக்காது அத்தி யட்சர் ஆளுகை முறையைக் கொண்டு வருவது அவரது நோக்க மாக இருந்தது. சபை ஆளுகை முறை என்ற கோட்பாட்டில் விசுவாசத்தைப் பலப்படுத்துவதே தமது கனவும் நினைவுமாக இருந்தது என கனம் அத்தியட்சகர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். கிறிஸ்தவ விசுவாசத்தைச் சபையில் ஒவ்வொருவரும் உள்ளூர உணர்ந்து கொள்ளவும், அதனைத் தன் வயப்படுத்தவும் அரும் பாடுபட்டார். இதுவே அவருடைய வாழ்வின் இலட்சியமாக விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராயர் குலேந்திரனும் வண. கே. எஸ்.
ஜெயசிங்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அத்தியட்சாதீனத்தைச் சேர்ந்த குருமார்கள் அறிவிலும், ஆன்மீகத்திலும் வளர்ச்சியுற வேண்டுமென அவர் அரும் பாடு பட்டார். ஆற்றல் மிக்கவர்களைத் தமது சபையிலே குருமாராகச் சேர்த்துக் கொண்டார். அவர்கள் இறையியல் கல்வியைப் பெறுவதற்கும் மேற்படிப்பைப் பெறுவதற்கும் இந்தியாவிலும், அமெரிக்காவிலுமுள்ள மிகச் சிறந்த கல்லூரிகளுக்கு அனுப்பினர். பேராயர் குலேந்திரனுக்குத் தமிழ் மொழியிலும், தமிழிசையிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. தமது ஆதீனத்தில் கர்நாடக இசை வளர வேண்டுமென்றும் சங்கீத முறைகளில் ஆராதனைகள் நடைபெற வேண்டுமெனவும் அரும் பாடுபட்டார். மூன்று முறை திருச்சபை பாட்டுப் புத்தகத்தை மீளாய்வு செய்து திரும்பப் பதிப்பித்தார். 1951 ம் ஆண்டு. 1957 ம் ஆண்டு, 1962 ம் ஆண்டு ஆகிய வருடங்களில் பாட்டுப் புத்தக புதிய பதிப்புக்கள் வெளிவந்தன.

இக்காலக் கட்டத்திலே இலங்கையின் அரசியல் வானில் பல முக்கியமான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1947 ஆம் ஆண்டு இந்தியப் பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1948 ல் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1956 ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் அங்கிகாரம் பெற்றது. 1960 ம் ஆண்டு பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டன. 1966 ம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை வேலை நாளாக்கப்பட்டது. இவ்வாறு பலவிதமான பிரச்சனைகளுக்கூடாக திருச்சபை தனது பணியை ஆற்றவேண்டியதாக இருந்தது.' குலேந்திரன் பழைய ஏற்பாடுத் தீர்க்கதரிசிகள்போல இப்பிரச்சினைகள் குறித்துக் கடவுளுடைய செய்தியைக் கூறிக் கொண்டே இருந்தார். 1960 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பாடசாலைகளைச் சுவீகரிக்கும் திட்டம் அவருக்கு மிகுந்த வேதனையை அளித்தது. ஏனெனில் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சியாதீனம் பாடசாலைகளிலேயே தங்கியிருந்தது.

1955 ம் ஆண்டில் அத்தியட்சர் தனது துணைவியாருடனும் வண. கே. எஸ். ஜெயசிங்கத்துடனும் மலேயாவிற்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டார். இது மலேயாவிலுள்ள தமிழருக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்த வழிவகுத்தது. அத்தியட்சரும் அவருடன் சென்றவர்களும் மலேயாவின் பல பாகங்களுக்குச் சென்று உறவைப் பலப்படுத்த அரும் பாடுபட்டனர். இது அத்தியட்சர் தம்முடைய பதவி காலத்தில் செய்த மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் திகதி அத்தியட்சர் குலேந்திரனுக்கு 70 வயது பூர்த்தியானது. அக் கால பிரமாணங் களின்படி அவர் தமது பதவியினின்றும் இளைப்பாறினர். அவ் வருடம் செப்தெம்பர் மாதம் 9 ம் திகதி அத்தியட்சகரின் செயற்குழு அவருக்கு ஒரு பிரியாவிடை அளித்தது. அந்தக் கூட்டத்தில் அத்தியட்சர் தமக்குத் தோளோடு தோள் கொடுத்து உழைத்தவர்களை மனமாரப் பாராட்டினர். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு எஸ். வீ. அழகரத்தினம், ஜெ. சி. அமரசிங்கம், P. W. அரியரத்தினம், எல். எஸ். குலத்துங்கம், வண. கெ. எஸ். ஜெயசிங்கம் என்பவர்களாவர்.

தம்மைத் தொடர்ந்து அத்தியட்சாதீனத்தை நடத்தப் போகிற வர்களுக்குப் பின்வரும் ஆலோசனைகளைக் கூறினர். (அ) தமிழிலும் ஆங்கிலத்திலும் நமது சபையார் நன்கு தேர்ச்சி அடைதல் வேண்டும். (ஆ) தமிழறிவு இலங்கையிலே செயற்படும் ஒரு தேசிய திருச்சபைக்கு மிகவும் அவசியமானதாகும். (இ) சர்வதேச அமைப்புக்களுடன் தொடர்புகொள்ள ஆங்கில அறிவு அத்தியா வசியமாகும். ஆகவே இரு மொழித் தேர்ச்சி அவசியமானதாகும்.

(ஆ) இந்தியாவுடனுன தொடர்பை விட்டுவிடக் கூடாது. இன்று நாம் பிலிமத்தலாவாவுடன் இணைய வேண்டுமென்று நெருக்கு தல் ஏற்பட்டுள்ளது. பிலிமத்தலாவ இறையியல் பள்ளியை நட த்துபவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் உதவியை நாடியே இவ்வாறு நமக்கு அழைப்பு விடுக்கின்றனர். ஆனல் நாம் இந்தியத் தொடர்பினை ஒரு பொழுதும் விட்டுவிடக் கூடாது.

(இ) அங்கிலிக்கன் கிறிஸ்தவர்கள் உள்ளத்தில் சற்று வைராக் கியம் ஏற்படப் பாடுங்கள். அவர்கள் ஞாயிற்றுக்கிழமையை வேலை நாளாக்கினர். சிங்களம் கற்பிக்கத் திட்டம் தீட்டுகின்றனர். ஆனல் திருச்சபை பாரம்பரியங்களில் அவர்களுக்கு நாட்டம் இல்லை.

பின்வருவன அவசியம் கவனிக்கப்பட வேண்டியவை:— (1) இன்றுள்ள பாடசாலைகளிலே அதாவது யாழ்ப்பாணக் கல்லூரி யையும் உடுவிலையும் கைவிட்டு விடாதீர்கள். (2) உதயதாரகை நடத்துவதற்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. ஆனல் இதனை ஒருபொழுதும் கைவிட்டு விடலாகாது. சங்கீத முறை ஆராதனையைக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஒரு பொழுதும் அங்கிலிக்கன் திருச்சபையின் பண்ணிசை முறையைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விடாதீர்கள். (3) வேலை வாய்ப்புக்காக ஊழியத்தைநாடி வருபவர்களை ஒருபொழுதும் கிறிஸ்தவ ஊழியத்திற்குள் சேர்த்துக் கொள்ளாதீர்கள்.

இவ்வாறு ஆலோசனைகளைக் கூறி அத்தியட்சர் செயற் குழுவிடமிருந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார். இதன் பின்னர் யாழ்ப்பாணக்கல்லூரி சதுக்கத்தில் ஒரு பிரமாண்டமான பிரியாவிடை அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் கொழும்புக்குப் பயணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியன்

''மனிதரின் சாதுரியப் பேச்சும், அறிவாற்றலும் நூல்களிலேயே அடங்கிக் கிடக்கின்றன; அவை காலம் என்னும் கறையானல் அழிக்கப்பட முடியாதவை, திரும்பத் திரும்பப் புத்தெழுச்சி பெறும் ஆற்றல் பெற்றவை. அவற்றை எழுத்தோவியங்கள் என்று கூறுவது பொருந்தாது. ஏனெனில் அவை இன்றும் சுரந்து கொண்டேயிருக்கின்றன. தமது விதைகளை மற்றவர்கள் உள்ளத்தில் தூவி விடுகின்றன. அடுத்தடுத்து வரும் சந்ததியினரைத் தட்டியெழுப்பி, எண்ணுக்கடங்கா செயல்களில் ஈடுபடச் செய்கின்றன''.—பிரான்சிஸ் பேக்கன்.

பேராயர் குலேந்திரன் தமது சீவிய காலத்தில் பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்டு ஊக்கமாக உழைத்தார். அவர் எழுதிய நூல்களே அவரின் பெருமையை உலகுக்கு அறிவித்தன. குலேந்திரன் பல எழுத்தாளர்களைப் போல இளைஞனுகவே எழுத்துலகில் புகுந்துவிடவில்லை.

தனது படிப்பையெல்லாம் முடித்து, ஊழியனுகப் பதினைந்து வருட காலம் சேவை செய்து உலக அனுபவம் பெற்று எழுத்துலகிற் பிரவேசித்தார். தமது சீவிய காலத்தில் இருபது நூல்களை எழுதியுள்ளார். முதலாவது புத்தகங்கூட அவர் நாற்பத்தைந்து வயதைத் தாண்டிய பின்னரே எழுதப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும். ஐம்பது வயதிற்குப் பின்னர் தான் ஒருவன் புத்தகம் எழுத வேண்டுமென ஆலோசனை கூறுவார்.

குலேந்திரனின் நூல்களை நான்கு முக்கியமான பிரிவுகளுக்குள் அடக்கலாம். அவையாவன சமயங்கள் திருச்சபை வரலாறு, வாழ்க்கை வரலாறு அருளுரைகள் என்பனவாகும்.


---

"But the images of men's wits and knowledges remain in books, exempted from the wrong of time, and capable of perpetual renovation. Neither are they fitly to be called images, because they generate still and cast their seeds in the minds of others, provoking and causing infinite actions and opinions in succeeding ages."

**Francis Bacon**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The author Rt. Rev. Dr. S. Kulandran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயர் குலேந்திரனுக்கு மிகுந்த புகழைத் தேடித் தந்தவை அவருடைய சமயங்கள் பற்றிய நூல்களேயாகும். அவற்றில் மிக முக்கியமானது ''Grace in Christianity and Hinduism'' என்ற நூலாகும். இந்த நூல் 1964 ம் ஆண்டு இலண்டனிலுள்ள Lutterworth பிரசுராலயத்தினால் வெளியிடப்பட்டது. 270 பக்கங்களைக் கொண்ட இந்நூல் குலேந்திரனுடைய தெளிந்த அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் காட்டுகின்றது. 1938 ம் ஆண்டில் நடைபெற்ற தாம்பரம் மகாநாட்டில் இந்தப் புத்தகத்தைப் பற்றிய எண்ணம் தன் உள்ளத்தில் உதித்தது என்று கூறியுள்ளார். அந்த மகாநாட்டிலே கலந்து கொண்ட Hendrik Kraemer தாம் அருள் கோட்பாடு பற்றி ஒப்பீட்டு ஆய்வு செய்து ஒரு நூல் எழுத விருக்கிறேன் என்று குலேந்திரனிடம் கூறினார். ஆனால் அந்த நூல் பல வருடங்களாகியும் வெளிவரவில்லை. அந்த நூலைப் பற்றிய ஆவல் குலேந்திரன் உள்ளத்திலே அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. எனவே குலேந்திரன் தாமாகவே அந்த நூலை எழுத வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்.

இந்த நூலை எழுத முன்னர் குலேந்திரன் இறையியற் கல்லூரிகளில் உரையாடல் (Dialogue) பற்றிச் சிலஉரைகளை நிகழ்த்தினார். இக்காலத்தில் பலரும் Dialogue என்றால் பலர் கலந்துரையாடி இறுதியில் பல கட்சியினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மைகளை முத்துக்குளிப்பவர்கள் தேடிக் கண்டு பிடிப்பதனைப் போலக் கண்டு பிடிப்பது என்ற கருத்தை வெளியிட்டார்கள். ஆனால் குலேந்திரன் உரையாடல் என்பது ஒரு போதனை முறை என்று கூறினார். ஒருவன் தான் கண்டு கொண்ட சில கருத்துக்களை இன்னொருவனுக்குத் தர்க்க ரீதியாக அவன் விளங்கிக் கொள்ளும் வகையில் கூறுவதே யாகும் என்று குறிப்பிட்டார்.

இந்த நூலை எழுதுவதற்காக 1955 ம் ஆண்டு தமக்குக் கிடைத்த விடுமுறையைப் பயன்படுத்தினார். ஒன்பது மாத காலம் இந்தியாவில் இந்த நூலாக்கத்திற்காகச் செலவு செய்தார். இதிலே ஒரு மாத காலத்தைக் கொடைக்கானலிற் செலவிட்டார். எட்டு மாத காலத்தை பெங்களூரிலுள்ள இறையியற் கல்லூரி நூலகத்திற் செலவிட்டார். அக்காலத்தில் பெங்களூர் இறையியற் கல்லூரி நூலகத்திற் சேவை செய்த Lindsay அவர்கள் பேராயர் குலேந்திரனுக்கு மிகுந்த ஒத்தாசை புரிந்தார். இந்த நூலை எழுதுவதற்குக் குலேந்திரனுக்கு புனித அகுஸ்தீனார் எழுதிய Anti Pelagian Writings மிக அவசியமாகத் தேவைப்பட்டது. மதுரையிலிருந்த இந்தப் புத்தகத்தின் பிரதி யொன்றைத் தமது நண்பனாகிய தேவப்பிரகாசத்திடம் எடுத்து அனுப்பும்படி கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தார். அவரோ மதுரையிலிருந்து ஒரு சரக்கு ரயில் மூலம் இந்தப் புஸ்தகத்தை அனுப்பினார். பெங்களூரிலிருந்து பங்களூர் கன்டோன்மன்ற் புகையிரத ஸ்தானத்திற்கு வந்து சேர ஒரு மாத காலமாயிற்று. குலேந்திரனும், அவர் மனைவி அலிஸ் மதுரம்மாவும் ஒவ்வொரு நாளும் கன்டோன்மன்ற் புகையிரத ஸ்தானத்திற்குச் சென்று, புத்தகம் வந்துவிட்டதா என்று விசாரித்து வந்தனர். இறுதியில் புகையிரத ஸ்தான அதிபர் புத்தகம் வந்து சேர்ந்தால் உடனடியாகக் குலேந்திரன் வீட்டுக்கே அனுப்பி வைப்பதாகக் கூறிவிட்டார். இறுதியில் புத்தகம் வந்து சேர்ந்தது. தமது நூலை எழுதி முடித்து யாழ்ப்பாணம் திரும்பினார். கடைசி அத்தியாயம் தலைமன்னார் புகையிரத நிலையத்திலேயே முற்றுப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூல் குலேந்திரன் எழுதிய புத்தகங்களில் மிக முக்கியமானதாக இருப்பதனால் அதனைப்பற்றி R. H. S. Boyd அவர்கள் எழுதிய கருத்துக்களை மேலே தருகின்றோம்.

## S. KULENDRAN - THE MEANING OF GRACE

One of the most scholarly studies of a particular doctrine in its Christian and Hindu forms is Bishop Kulendran's book on Grace. Dr. Kulendran is Bishop of the Jaffna Diocese (in Ceylon) of the Church of South India, and his book represents the mature reflection of an experienced Theologian and Church leader. He gives an account of the Christian conception of Grace as seen in the New Testament (especially in Paul) and in Augustine and Luther, making it clear that his position is within the tradition represented by Sola Gratia and Sola Fide.

The second section of the book is a detailed exposition of the meaning of Grace, in the various Hindu theistic traditions, both Vaishnavite and Saivaite. He comes to the conclusion, that the Hindu idea of Grace, even in such a conception as the prapatti or total self-surrender of Southern Vaishnavism is quite inadequate for the interpretation of Grace in Christianity. So too the Vaishnavite doctrine of Avatara fails through its innate docetism to help our understanding of Christ's incarnation.

1959 ம் ஆண்டு செரம்பூர் பல்கலைக்கழகம் பேராயர் குலேந்திரனுக்கு டீ. டீ. பட்டத்தை வழங்கியது. அவரோடு அக் கல்லூரியின் முதல்வராயிருந்த வண. வில்லியம் ஸ்ரூவேட் அவர்களுக்கும் கனோன் சாம்பையா அவர்களுக்கும் இப்பட்டம் வழங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டது. குலேந்திரன் அவர்கள் எழுதிய ''Grace in Christianity and Hinduism'' நூலை மெச்சியே இந்தப்பட்டம் வழங்கப்பட்டது என்று பலர் தவறுக எண்ணுகின்றனர். அவர் கிறிஸ்தவ இறையியலுக்கு ஆற்றிய பல்வேறு தொண்டுகளுக்காகவும் இப்பட்டம் வழங்கப்பட்டதே சரியானதாகும்.

## THE GREAT ERRAND

இதுவே குலேந்திரன் எழுதிய முதலாவது நூலாகும். 1949 ம் ஆண்டு சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் இந்த நூலை வெளியிட்டது. இது 57 பக்கங்களைக் கொண்ட சிறு நூலாகும். நற் செய்தியைப் பரப்புதல் மிக அவசியம் என்பதனை உணர்த்துவதற்காகத் திருச்சபைத் தலைவர்கள் இந்த நூலை எழுதும்படி கேட்டுக் கொண்டனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்நூல் எழுதப்பட்டது.

## கிறிஸ்தவ நம்பிக்கைகள் ஓர் ஆராய்ச்சி

தமிழில் எழுதப்பட்ட இந்த நூல் 1956 ம் ஆண்டு சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்திஞல் வெளியிடப்பட்டது. இந்த நூல் 130 பக்கங்களைக் கொண்டது. 1951 ம் ஆண்டு மதுரைப் பேராயராகவிருந்த லெஸ்லி நியூபிகின் மண்டபம் என்றவிடத்தில் ஒரு ஞான ஒடுக்கத்தை நடத்திஞர். அந்த ஞான ஒடுக்கத்திலே கிறிஸ்தவ நம்பிக்கைகள் பற்றி உரையாற்றும்படி குலேந்திரன் பணிக்கப்பட்டார். அங்கு ஆற்றப்பட்ட உரைகளே இந்நூலாக உருப்பெற்றன.

## Concept of Transcendence

இந்த நூல் 1981 ம் ஆண்டு சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்திஞல் வெளியிடப்பட்டது. முன்னூற்றி அறுபது பக்கங்களைக் கொண்ட இந்நூல் பேராயர் குலேந்திரனின் பத்து வருட கால உழைப்பைக் கொண்டது. இந்த நூல் இஸ்லாம் கிறிஸ்தவம் இந்து மதம் பௌத்த மதம் ஆகிய நான்கு மதங்களிலேயுள்ள அடிப்படை உண்மைகளை ஆராய்கிறது. அதன் பின்னர் அந்தக் கொள்கைகள் எடுத்துரைக்கும் ஆதீதம் (Transcendence) பற்றி ஒப்பீட்டு ஆராய்ச்சி செய்கின்றது. இந்த நூலைப் பற்றிப் பதிப்புரை பின்வருமாறு கூறுகின்றது:—

The work surveys the four major religions - Islam, Christianity. Hinduism and Buddhism - laying down their major tenets before discussing the concept of Transcendence in each of them. The absolute precision and clarity in the survey and the logical development of thought must appeal to every layman student



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and scholar. While some books on theological subjects are heavy and difficult to wade through, Bishop Kulendran makes his points in the most easy and readable manner without in anyway compromising the depth of treatment. Transcendence is clearly the heart of any religion, and here we find an almost clinical and anatomical dissection which lays bare the heart of the matter. A book to read and cherish.

**The Message and the silence of the American pulpit**

203 பக்கங்களைக் கொண்ட இந்நூல் அமெரிக்காவிலுள்ள பொஸ்டன் நகரிலுள்ள பில்கிரிம் பிரெஸ்ஸினால் 1949 ம் ஆண்டு வெளியிடப்பட்டது. குலேந்திரன் 1945 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 1946 ம் ஆண்டு ஜூன் மாதம் வரை அமெரிக்கா வில் தங்கியிருந்தார். அங்குள்ள பல திருச்சபை அங்கத்தவர்களை யும் தலைவர்களையும் சந்தித்து உரையாடினார். அவர்களுடைய சிந்தனைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து, சில உண்மைகளைக் கண்டு பிடித்தார். அதன் விளைவாகவே இந்த நூல் வெளிவந்தது. இந்த நூலைப் பற்றி இதற்கு முகவுரை வழங்கிய Douglas Horton என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்:—

"Three years ago Bishop Kulendran crisscrossed the country addressed hundreds of Church groups and listened to some of America's greatest preachers and theologians. This book carries some of his findings. To him this is a time for the American Protestant Church to think through its total program, to take stock to find out where it is going, and why it wants to go there.

For those questioning the efficacy of their own preaching and the efficacy of the Protestant Church in America today, his ideas may serve as an instrument for clearer thinking and a spiritually strengthened pulpit."

இந்த நூல்களைவிடக் குலேந்திரன் இறையியல் சம்பந்தமாகப் பல உயர்ந்த கட்டுரைகளைச் சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். "The Morning Star" Religion and Society The Sonth India Churchman Jaffna College Miscellany என்னும் சஞ்சிகைகள் அவருடைய கட்டுரைகளைத் தாங்கி வந்துள்ளன. இவற்றினை யாழ்ப்பாணத்து C. I. S. R. S. ஸ்தாபனத்தார் தேடித் தொ குத்து நூல்களின் வடிவில் வெளியிட்டுள்ளனர். இக் கட்டுரைகள் ஐந்து தொகுதிகளாக வெளி வந்துள்ளன. இத்தொகுதிகளில் முதலாம் இரண்டாம் ஐந்தாம் தொகுதிகளில் இறையியற் கட்டு ரைகளைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Life of R. C. P. Welch

இந்த நூல் 1954 ம் ஆண்டு வெளிவந்தது. குலேந்திரன் தமது ஆன்மீக வழிகாட்டியான R. C. P. Welch என்பவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

R. C. P. Welch குலேந்திரனுக்கு முன்னர் சபா சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தராக இருந்தவர். குலேந்திரனின் திருமணத்தை நடாத்தி வைத்தவர். நீதி வழுவாத வாழ்க்கை முறையினால் குலேந்திரனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். அவர் சடுதியாக நோய்வாய்ப்பட்டு உலக வாழ்வை நீத்தார். இவர் திரைக்கு அப்பால் சென்ற பின்னர் அடிக்கடி குலேந்திர னுடைய கனவுகளில் தோன்றினார். இதனால் குலேந்திரன் இந்த மகானின் வாழ்க்கை வரலாற்றினை எழுதினார். வாழ்க்கை வரலாறு எழுதப்பட்ட பின்னர் Welch போதகர் குலேந்திரனின் கனவு களில் வரவே இல்லை.

## Life of Sevak Selvaratnam 1979

இந்த நூல் 142 பக்கங்களைக் கொண்டது. 1979 ம் ஆண்டு சுண்ணாகம் கிறிஸ்த சேவா ஆசிரமத்தினால் வெளியிடப்பட்டது. இந்த நூல் ஆச்சிரமத்தின் பொன் விழாவையொட்டி மிக அவசர மாக எழுதப்பட்டது. எனினும் பல அரியத் தகவல்களை மிகுந்த சுவார்சியமாகக் கூறுகின்றது.

## Life of Canon Somasunderam

இந்த நூலினை கனம் சோமசுந்தரத்தினுடைய பிள்ளைகளும், உறவினர்களும் 1970 ம் ஆண்டு வெளியிட்டனர். இது 155 பக்கங்களைக் கொண்டது. கனம் சோமசுந்தரம் அவர்களுடைய மூத்த மருமகனும் குலேந்திரனின் நெடுங்கால நண்பருமாகிய பேராசிரியர் கு. நேசையாவின் வேண்டுகோளுக்கிணங்க குலேந் திரன் எழுதினார். கனன் சோமசுந்தரம் வாழ்ந்த காலம் அவ ருடைய இயல்புகள் இறையியற் கருத்துக்கள் என்பனவற்றை மிகச் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்துள்ளார். இலங்கைத் திருச்சபை வரலாற்றை விளங்கிக் கொள்ள இந்த நூல் மிகுந்த பயனுள்ளதாகும். இவற்றைவிட வேறு நண்பர்களைப் பற்றியும் சுருக்க வரலாறுகளை வெவ்வேறு சஞ்சிகைகளில் குலேந்திரன் எழுதியுள்ளார். அவற்றினை C. I. S. R. வெளியிட்ட நூற் தொகு ப்பு ஒன்றிலே காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை வரலாற்று நூல்கள்

## Facing a Renaissance

இந்த நூல் 1957 ம் ஆண்டு கல்கத்தா Y. M. C. A. பிரசுராலயத்தினுல் வெளியிடப்பட்டது. இந்த நூல் 105 பக்கங்களைக் கொண்டது. நாக்பூரில் நடைபெற்ற மகாநாட்டிலே பேராயர் குலேந்திரன் ஆற்றிய உரைகளே இந்நூலின் தொகுப்பாகும். இந்து, பௌத்த, இஸ்லாம் மதங்களின் புத்தெழுச்சியும் கிறிஸ்தவ சமயத்தின் நிலைப்பாடு பற்றியும் இந்த நூலிலே மிகத் தெளிவாகக் குலேந்திரன் விளக்குகின்ருர்.

## கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு

இருநூற்றி ஐம்பத்தாறு பக்கங்களைக் கொண்ட இந்நூல் இந்திய வேதாகமச் சங்கத்தினுல் 1967 ம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1944 ம் ஆண்டு D. T. Niles உடுவிலிலே சில வேதாகம பயிற்சி வகுப்புக்களை நடாத்தினர். அந்த வகுப்புக்களுக்குக் குலேந்திரன் கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு பற்றி உரை நிகழ்த்தினுர். அதன் பின்னர் குலேந்திரனுக்கு இந்த விடயத்தில் மிகுந்த பற்று ஏற்பட்டது. பல்வேறு வேதாகமத் திருப்புதல்களின் பிரதிகளினைத் தேடிக் கண்டு பிடித்துப் பேரானந்தம் அடைந்தார். யாழ்ப்பாணத்திலே நாவலரின் உதவியுடன் செய்யப்பட்ட திருப்புதலையும் கண்டு பிடித்தார். 20 வருட கால உழைப்பு இந்தப் புத்தகத்தில் இருக்கிறது. யாழ்ப்பாணத் திருச்சபை வரலாற்று ஆய்வுக்கும் இந்தியத் திருச்சபை வரலாற்று ஆய்விற்கும் இது பெருமளவிற்குத் துணை புரியும்.

## யாழ்ப்பாணக்கல்லூரி வரலாறு

## History of Jaffna College

இது யாழ்ப்பாணக்கல்லூரியினரால் வெளியிடப்பட்டது. 1922 ம் ஆண்டு தொடக்கம் 1980 ம் ஆண்டு வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற பல்வேறு மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் இந்த நூல் எடுத்து இயம்புகின்றது.

## Navajeevanam

1984 ம் ஆண்டு பரந்தனில் நவஜீவன ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்டது. இது 50 பக்கங்களைக் கொண்ட சிறிய புத்தகமாகும். நவஜீவனத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராகிய எலிசபெத் பேக்கர் அம்மாவுடைய தினசரிக் குறிப்புக்களை ஆதாரமாக வைத்து இந்த நூலைக் குலேந்திரன் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலேந்திரன் எழுதிய ஏனைய திருச்சபை வரலாற்றுக் கட்டுரை களை C. I. S. R. S. வெளியிட்ட நூற் தொகுதிகளில் கண்டு கொள்ளலாம்.

பேராயர் குலேந்திரன் அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்ட வர். இலங்கை அரசியல், இந்திய அரசியல், சர்வதேச அரங்கு என்பனவற்றை மிக உன்னிப்பாகக் கவனித்து வெவ்வேறு கால கட்டத்தில் அரிய கட்டுரைகளை எழுதியுள்ளார். திராவிட முன் னேற்றக் கழகம் பாக்கிஸ்தானின் உதயம், பிரிட்டிஸ் முடியாட்சி, U. N. P. ஆட்சி, U. S. உயர் நீதிமன்றம், வேலை நிறுத்தங்கள், வாலிபர் கழகங்கள், இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் விஷயம் குறித்து அரிய கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றை C. I. S. R. S. வெளியிட்ட தொகுதி மூன்று, நான்கு தொகுதிகளில் கண்டு கொள்ளலாம். குலேந்திரனின் அரசியற் கட்டுரைகள் நூல் வடிவத்தில் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குலேந்திரன் தமது 88 வது வயதில் வண. கலாநிதி வெஸ்லி அரியராஜா எழுதிய Bible and People of Other Faiths என்ற நூலுக்கு மறுப்புரையாக ஒரு சிறிய புத்தகத்தை எழுதினார். இந்தப் புத்தகத்தை யாழ்ப்பாண C. I. S. R. S. ஸ்தாபனத்தார் வெளியிட்டு இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பிரிவு

இயேசையா பிளந்த ஆதிமலையே
மோசநாளில் உன்னில் ஒளிப்பேனே!

அத்தியட்சர் கால்டுவேல்


பேராயர் குலேந்திரனின் தொண்ணூறுவது பிறந்த நாள் **1990** ம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அதனையொட்டி ஒரு விசேட நற்கருணை ஆராதனை வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெற்றது. அடுத்த நாள் திங்கட்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி ஹவுலண்ட் விடுதியில் நடைபெற்ற ஐக்கிய மதிய, போசனத்தில் அவருடைய நெருங்கிய நண்பர்களும் சபாசங்க உத்தியோகத்தர்களும் பங்கு பற்றினர்கள்.

இந்த விழாவிற்குப் பின்னர் பேராயர் குலேந்திரன் தமது பூவுலகப் பணி முடிந்து விட்டதனைப்போலச் செயற்பட்டார். தாம் எழுதிய நூல்களின் பிரதிகளைத் தேடித் தமது மூத்த மகனுக்கென இரும்புப் பெட்டியொன்றின் போட்டு வைத்தார். மிகவும் சீர் கெட்டுப் போன பிரதிகளை நல்ல பிரதியுள்ளவர்களிடம் கொடுத்துமாற்றி பூரணமான நூற்றெருகுதியை அமைத்தார். தமது நூல் நிலையத்தைச் சுத்தம் செய்து நிரைப்படுத்துவதில் ஆர்வம் காட்டினர் இதுவரை காணப்படாத கழிவிரக்கம் *(Nostalgia)* அவரிடம் தோன்றலாயிற்று. இறந்துபோன தமது நண்பர்களைப் பற்றி அடிக்கடி பேசலானர். ஒரு முறை இந்நூலாசிரியனுடன் பேசும்பொழுது வானமண்டலம் சென்றடையும்போது யாரை முதன் முதலாகப் பார்க்க வேண்டும்? என்று கேட்டுவிட்டுத் தாமே விடையாகப் பவுல் அப்போஸ்தலனைத் தான் பார்க்க வேண்டும் என்று பகர்ந்தார். தமது இளமைக்கால நண்பர்கள் ஒருவருமேயில்லை என்ற எண்ணம் அவரைத் தாக்கியது. யாராவது வயோதிபர் அவரைக் காண வந்தால் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்.

ஆனல் தமது சுகத்தைப் பேணுவதில் கண்ணுங் கருத்துமாகவேயிருந்தார். சிறிய மாறுதல் தன்னில் ஏற்பட்டாலும் உடனே வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெற்று வந்தார். வைத்தியரின் ஆலோசனையை எந்தச் சிறிய மாறுதலுக்கும் பெற்றுக்கொள்வதுதான் நோய் அணுகாமற் காப்பதற்கு வழியென்று கூறி வந்தார். தொண்ணூறுவது வயதிற்குப் பின்னர் இடைக்கிடை அவருக்குக் காய்ச்சல் வந்து மாறிக் கொண்டிருந்தது. நெஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராயர் குலேந்திரன் தமது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் செய்த பணிகளிலொன்று 1990 ம் ஆண்டு மீண்டும் பட்டதாரிப்பிரிவை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிப்பது பலமாகக் கேட்கிறதே? என்று ஒரு வைத்திய நண்பரிடம் கேட்டார். அவர் ''இடைக்கிடை கேட்டால் ஒன்றுமில்லை! அடிக்கடி கேட்டாற்றான் ஆபத்து'' என்றார்.

தமது அந்திய காலம் நெருங்கி வருவதனைக் கண்ட பேராயர் பக்தி வாழ்க்கையில் மேலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார். நீண்ட நேரம் காலையிலும் மாலையிலும் ஜெபம் செய்தார். வட்டுக் கோட்டைத் தேவாலயத்தின் வழிபாடுகள் எல்லாவற்றிலும் மிகுந்து அன்புடனும் பாசத்துடனும் வந்து பங்கு பற்றினர். நடப்பது அவருக்குக் கடினமாக இருந்தபடியால் நண்பர்கள் அவரைத் துவிச்சக்கர வண்டியில் கொண்டு வந்து கொண்டு போனார்கள். கிறிஸ்தவ அன்பர்கள் மட்டுமன்றி, இந்து நண்பர்களும் அவரைத் தேவாலயத்திற் கொண்டு வந்து உதவினார்கள். இப்படி அன்புப் பணியாற்றியவர்களில் ஆசிரியர் சிதம்பரநாதன், சி. சிவதரன், திரு. முரேஷ் இராஜேந்திரா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

1991 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ம், 22 ம், 23 ம் திகதிகளில் அமெரிக்க இலங்கை மிஷனின் 175 வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. வைபவத்தின் இறுதி நாள் பேராயரின் பிறந்த நாளாகவும் அமைந்து விட்டது. பேராயர் பாரிய பிறந்த நாள் கேக் ஒன்றினைப் பல நூறு மக்கள் மத்தியில் வெட்டி மகிழ்ந்தார். விழாவுக்கு வந்த அமெரிக்க பிரமுகர்களும் உள்ளூர் நண்பர்களும் அவரைப் பேரன்புடன் வாழ்த்தினார்கள். அதுவே பேராயர் சபாபதி குலேந்திரன் பங்குபற்றும் கடைசிப் பெருவிழா என்று அப்பொழுது ஒருவரும் நினைக்கவில்லை. விழாவின் போதும் அதற்குப் பின்னரும் மிகவும் குதூகலமாகவே காணப்பட்டார்.

தொண்ணூற்றோராவது பிறந்த நாளுக்குப் பின்னரும் அவர் பூரணமான சிந்தனைத் தெளிவுடனேயே பேசி வந்தார். தமது பேரப்பிள்ளைகளுக்குப் பல ஆலோசனைகளைக் கூறி வந்தார். ஆனால் அவருடைய ஆலோசனைகள் ஹாஸ்யம் நிறைந்து காணப்பட்டன. மரணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தமது இருபது வயதுப் பேரன் ஒருவனைச் சுட்டிக்காட்டி ''நான் எண்பது வயதிலே செய்ததனை இவன் இருபது வயதிலே செய்கிறான்'' என்றார். என்ன செய்கிறான் என்று கேட்டபொழுது ''சும்மா இருக்கிறான்'' என்றார்.

1992 ம் ஆண்டு தை மாசியில் யாழ்ப்பாணத்தில் முன்னர் காணப்படாத கடும் பனி காணப்பட்டது. ''தொடுத்த பருவத்தால் நீண்ட உயர்ந்த மரங்களெல்லாம்'' ஒவ்வொன்றாகச் சரிந்து கொண்டிருந்தன. பேராயர் கூடுமானவரை அவர்களின் இறுதிச் சடங்குகளுக்குச் சென்று கொண்டிருந்தார். நாட்டின் போர் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அவருடைய நண்பர்கள் பலர் கொழும்புக்கும் ஏனைய தென்னிலங்கைப் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்தனர். இதனுல் அவருக்கு வீட்டை விட்டு வெளியே சென்று நண்பர்களுடன் அளவளாவுவதற்குக் கூட வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே யாராவது அவருடன் பேசுவதற்காக வீட்டிற்குச் செல்லும் வேளை யில் பேரானந்தம் அடைந்தார். இறுதிவரை அரசியல் விஷயங் களிலும் நாட்டு நடப்புக்களிலும் ஆர்வமுடையவராகவே காணப் பட்டார். ஆனுல் முதுமையைப் பார்த்துச் சிரிக்கவும் அவர் தெரிந்து வைத்திருந்தார். ஒரு முறை நண்பர் ஒருவருடன் வீட்டிலே பேசிக் கொண்டிருந்தபொழுது ''எனக்கு குளியல் அறை க்குப் பொகவேண்டியிருக்கிறது. ஆனுல் நான் அங்கு போனுல் நீ எழும்பி ஓடிவிடுவாய் அதனுல் போகாமல் இருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார். வாலிப நண்பர்களின் துணை கொண்டு துவிச்சக்கர வண்டியில் அத்தியட்சாதீனக் காரியாலயத்திற்கும் யாழ்ப்பாணக்கல்லூரிக்குஞ் சென்று நண்பர்களுடன் சல்லாபஞ் செய்து மகிழ்ந்தார்.

..1992 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் தமது பூவுலக நாட்கள் முடிவுக்கு வந்துவிட்டதனையுணர்ந்தார். ''முடிவு சமீபம் என்று தெரிந்து கொண்டிருப்பது எவ்வளவு சலாக்கியம்'' என்று நண்பர் ஒருவரிடம் கூறினுர். பெப்பிரவரி மாதம் 13 ம் திகதி வியாழக் கிழமை பேராயர் குலேந்திரன் தமது வழக்கத்தின்படியே காலைத் தியானத்தை முடித்துக் கொண்டு காலை உணவை உட் கொண்டார். தண்ணீரை அருந்தினுர். பின்னர் முற்பகல் 9.30 மணிபோல் ஒரு வாலிபரின் துவிச்சக்கர வண்டியில் ஏறி யாழ்ப் பாணக்கல்லூரி அதிபரின் அலுவலகத்திற்குச் சென்றுர். அதிப ருடன் நாற்பது நிமிடம் (ஒரு பாட வேளை) உரையாடினுர். திரு. சி. என். அண்ணுத்துரை, ஜவஹர்லால் நேரு, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் என்பவர்களைப் பற்றியே அவர் மிகுந்த ஆர்வத்துடன் பேசினுர். தேநீர் அருந்திவிட்டுக் கல்லூரி அலு வலகத்தில் இருந்த லிகிதர்களுடன் வேடிக்கையாகச் சில வார்த் தைகள் பேசினுர். பின்னர் இன்னெரு வாலிபரின் துவிச்சக்கர வண்டியில் ஏறித் தமது இல்லஞ் சென்றுர். வீட்டிற்குச் சென்ற வுடன் அவர் அவசரம் அவசரமாகக் குளியலறைக்குச் சென்றுர். அங்கிருந்து வெறியேறத் தாமதம் ஏற்பட்டது. வீட்டிலிருந்த பேரப்பிள்ளைகள் அவரைத் தூக்கி வந்து கட்டிலிலே படுக்கும்படி செய்தார்கள். கட்டிலில் படுத்திருந்த பேராயரைப் பார்த்த அயல வர் ஒருவர் பாரிசவாதத்தால் தாக்குண்டிருக்கிறுர் போலத் தெரி கிறது என்று கூறினுர். இடது பக்கம் முழுவதும் உணர்ச்சியற்றுப் போயிருந்தது. வட்டுக்கோட்டையில் பணியாற்றி வந்த டாக்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரத்தினம் அழைத்து வரப்பட்டார். அவர் பேராயரைப் பரி சீலனை செய்துவிட்டு "முடிவு நெருங்கிவிட்டது" என்று இரகசிய மாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

இதன் பின்னர் பேராயர் டி. ஜே. அம்பலவாணருக்குப் பேராயர் குலேந்திரன் நிலைமை தெரிவிக்கப்பட்டது. உடனே அவர் பேராயர் குலேந்திரனை மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல ஒழுங்குகள் செய்தார். பேராயர் அம்பலவாண ரின் மோட்டார் வாகனம் கொண்டு வரப்பட்டது. வைத்திய சாலைக்கு அவரை எடுத்துச் செல்லமுன் பேராயர் அம்பலவாணர் ஜெபம் செய்தார். பின்னர் அவரைத் தூக்கியபொழுது பூரண மான சிந்தனைத் தெளிவுடன் பேராயர் குலேந்திரன் Long Past the Biblical Age என்று கூறினார். யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரி யர்கள் சிலரின் துணையுடன் பேராயர் மானிப்பாய் வைத்தியசா லைக்குச் சென்றார். போகும் போது பேராயர் தமது நண்பர்களைப் பற்றிக் குறிப்பாகத் தம்மை அடிக்கடி சந்தித்த வட்டுக்கோட்டை நண்பர்களைப் பற்றியே பேசிக் கொண்டு சென்றார்.

மானிப்பாய் வைத்தியசாலையில் அவருடைய உணர்வுகள் சிறிது சிறிதாக மங்கி வந்தன. வியாழன் இரவு பத்து மணிவரை அவரு க்குச் சுய உணர்வு இருந்தது. இரவு 10.30 மணிக்கு நண்பர் ஒருவர் அவரைச் சந்திக்கச் சென்றபொழுது அவர் உறக்கத்தி லிருந்தார். 14 ம் திகதி வெள்ளிக்கிழமை அவர் யாருடனும் பேசவில்லை. வைத்தியர்களுக்கு மாத்திரம் இனித் தன்னைத் தொந் தரவு செய்ய வேண்டாம் என்ற தோரணையில் கையை அசைத் தார். பெப்ரவரி மாதம் 14 ம் திகதி மாலை 5.30 மணிக்குப் பேராயர் சபாபதி குலேந்திரன் தமது சீவிய ஓட்டத்தை முடித் தார்.

பேராயர் குலேந்திரன் மரித்தவுடனேயே, பேராயர் டி. ஜே. அம்பலவாணரின் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் இறுதி ஆராதனை பற்றிய ஒழுங்குகள் செய்ய மானிப்பாய் வைத்தியசாலையில் நடாத் தப்பட்டது. அன்றிரவு பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆயத்தம் செய்யப்பட்டு வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. வட்டுக்கோட்டைத் திருச்சபையி னரும் யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர்களும், சிற்றூழியர்களும் மாணவர்களும் இறுதி ஊர்வலத்திற்கான ஆயத்தங்களைச் செய் தார்கள். யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பேராய ரின் அபிமானிகள், நண்பர்கள், உறவினர்கள் திரளாக வந்து பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். திங்கட்கிழமை 17 ம் திகதி அரசாங்க வங்கி விடுமுறை தினமாகவிருந்தது. அன்று தான் பேராயரின் மரணச் சடங்குகள் நடைபெற்றன. அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்திலிருந்து யாழ்ப்பாணக்கல்லூரி வரை, யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து சங்கரத்தை வரை வீதிகள் தோரணங்களினுலும் வாழை மரங்களினுலும் அலங்கரிக்கப்பட்டன.

காலை 8.00 மணிக்குப் பேராயரின் இல்லத்தில் வீட்டு ஆராதனை சபை ஊழியன் வண. ஜீ. டீ. ஆனந்தராஜனினுல் நடாத்தப் பட்டது. பூதவுடல் வீட்டு வாயில் வரை பேராயரின் நெருங்கிய உறவினர்களினுலே எடுத்துச் செல்லப்பட்டது. வீட்டு வாயிலி லிருந்து யாழ்ப்பாணக்கல்லூரி—பிறவுண்—மைதான நுழை வாயில் வரை வட்டுக்கோட்டை அன்பர்களினுலே எடுத்துச் செல் லப்பட்டது. நுழைவாயிலிலிருந்து கல்லூரி அலுவலகம் வரை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்கள் பூதவுடலைத் தூக்கிச் சென் ருர்கள். அலுவலகத்திலிருந்து முன் வாயில் வரை கல்லூரி ஆசிரி யர்களும் நிர்வாகிகளும் பூதவுடலைச் சுமந்து சென்றனர். முன் வாயிலிலிருந்து தேவாலயம் வரை வட்டுக்கோட்டைத் திருச்சபை அங்கத்தினர்கள் சுமந்து சென்ருர்கள்.

இறுதியாராதனை சரியாகக் காலை 9.00 மணிக்கு ஆரம்ப மானது. யாழ்ப்பாணக்கல்லூரிப் பாடகர் குழுவும் உடுவில் மகளிர் கல்லூரிப் பாடகர் குழுவும் ஆயத்த நிலையிலிருந்தன. பேராயர் டி. ஜே. அம்பலவாணர், அத்தியட்சாதீன செயலாளர் வண. ஏ. ஜெயக்குமாரன், வட்டுக்கோட்டைத் திருச்சபை ஊழி யன் வண. ஜீ. டீ. ஆனந்தராஜன், ஆச்சிரமத்து சேவக் சாம் அல்பிரட் இறையியற் கல்லூரிப் பேராசிரியர் வண. டி. ஆர். அம்பலவாணர், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆராதனையில் பங்கேற்றனர்.

வண. டி. ஆர். அம்பலவாணர் தமதுரையில் பேராயர் குலேந்திரன் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கற்று அரங்கேறிய பின்னர் மதகுருவாக வர விழைகின்ருர் என்ற செய்தி எமது சமுதாயத்தில் ஒரு கனலை ஏற்படுத்தியது என்ருர். தமது பெற் ருேர் விரும்பாமல் இருந்தபொழுதும் குலேந்திரன் தேவ ஊழி யத்தில் பிரவேசித்தார். உலகப் பிரகாரமான வாய்ப்புக்களும் வசதிகளும் அவரைக் கவர்ந்து கொள்ளவில்லை. இறுதிவரை இறை வனுடைய அழைப்புக்கு அவர் விசுவாசமாகவேயிருந்தார். அவர் கல்விப் பெருக்கத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். ஊழியர் களின் கல்வி வளர்ச்சியிலும் ஆன்மீக வளர்ச்சியிலும் அதிக ஆர்வமுடையவராகவிருந்தார். அவர் கல்வியில் மகோன்த நிலையை அடைந்திருந்தாலும் மிகுந்த பணிவும் தாழ்மையும் உடையவராகவே காணப்பட்டார். ஏழைகளுடன் பாமர மக்க ளுடனும் அன்பாகப் பழகினுர். சுதேச மயமாக்கப்பட்ட திருச் சபை என்பதே அவர் கனவாகவிருந்தது. திருச்சபையில் கர்னுடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையை வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாகவிருந்து இசைவழி பாட்டை நமது ஆராதனைகளில் புகுத்தினர் என்றும் வண. டி. ஆர் அம்பலவாணர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. கலாநிதி எஸ். ஜெப நேசன் தனதுரையில் பேராயரின் உறுதி படைத்த உள்ளத்தைப் போற்றினர். அப்போஸ்தலனாகிய பவுலினால் எடுத்துரைக்கப்பட்ட நற்செய்திக்கு அவர் இறுதிவரை விசுவாசமாகவேயிருந்தார். பவுல் அப்போஸ்தலனினால் எடுத்துரைக்கப்பட்டுப் புனித அகுஸ்தீனர், மார்ட்டின் லூதர் கார்ல் பார்த் ஆகியோரினால் பேணப்பட்ட நற்செய்தியே அவரின் பற்றுக் கோடாகவிருந்தது. கிறிஸ்துவின தும் அவரது திருச்சபையினதும் ஒப்பற்ற தன்மையில் அவர் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார். இலங்கைத் தமிழர்களின் இன்னல் களைக் கண்டு பெரும் வேதனையுற்றார். தந்தை செல்வா முன்னாள் அமைச்சர் திருச்செல்வம் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இலங்கைக்குச் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பு ஏற்படுவதற்குப் பாடுபட்டார். ஆவியின் கனிகள் ஒன்பதும் பேரா யர் வாழ்வில் பரக்கக் காணக்கூடியதாகவிருந்தன என்றும் அவர் குறிப்பிட்டார். பேராயர் டி. ஜே. அம்பலவாணர் தமது அரு ளுரையின் மகுட வாக்கியமாக 1 கொரி 15: 57 ம் வசனத்தைத் தேர்ந்து கொண்டார். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்குத் தோத் திரம். அவர் பேசுகையில் கிறிஸ்த விசுவாசம் உயிர்த்தெழுதலின் விசுவாசமென்றும், அதனாலேதான் திருச்சபை உயிர்த்துடிப்புடன் செயலாற்றுகின்றதென்றும் குறிப்பிட்டார். இயேசுவின் சிலுவை மரணத்தினால் பயந்து போயிருந்த சீடர்கள் உயிர்த்தெழுந்த காட்சியைக் கண்டதும் தைரியத்துடன் உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவித்தார்கள். திருச்சபை துன்பங்களையும் பாடுகளையும் மரண ஓலங்களையும் சந்தித்திருக்கின்றது. ஆனால் அவற்றிற் கூடாகப் பவுல் அப்போஸ்தலன் எடுத்தியம்பிய ''ஆனால்'' அவர்களைத் தாங்கிக் கொண்டது. நம்முடைய கர்த்த ராகிய இயேசுக் கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்குத் தோத்திரம்'' என்று ஆர்ப்பரித்தனர். பேராயர் குலேந்திரன் அப்போஸ்தவர், திருச்சபைப் பிதாக்கள் பரிசுத்த வான்கள், இரத்தச் சாட்சிகள் என்ற நீண்ட நெடிய அணியைச் சேர்ந்தவர். 1958 ம் ஆண்டு இனக் கலவரம் 1960 ம் ஆண்டு பாடசாலைச் சுவீகரிப்புச் சட்டம் பின்னர் வந்த இனக் குரோதங் கள் அவரை வேதனைப்படுத்தின. ஆனால் அவற்றின் மத்தியிலும் பேராயர் அவர்கள் ஆனால் ஜெயங் கொடுக்கிற தேவனுக்குத் தோத்திரம் என்று உறுதியோடு கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மன உறுதியும் திட விசுவாசமுங் கொண்டவர். அவருடைய பிரிவை நினைக்கும் பொழுது ''என் தகப்பனே என் தகப்பனே இஸ்ரவேலருக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே'' என்று எலிசா தீர்க்கதரிசியின் புலம்பல்தான் மனதிற்கு வருகின்றது. எமது ஆதீனத்தின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் பொழுது அவர் உண்மையில் நமது இரதமும் குதிரை வீரருமாகவேயிருந்தார் என்பது பெறப்படும். இறுதியில் பேராயர் அம்பலவாணர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராய், ''வருங்கால வரலாற்று ஆசிரியன் பேராயர் குலேந்திரன் அமெரிக்க இலங்கை மிஷனின் 175 வருட கால உழைப்பிலே விளைந்த மிகச் சிறந்த முத்து என்று குறிப்பிடுவான்'' என்றார். யாழ்ப்பாணக் கல்லூரிப் பாடகர் குழுவினாலும் உடுவில் மகளிர் கல்லூரிப் பாடகர் குழுவினாலும் விசேட பாடல்கள் பாடப்பட்டன. ஆராதனை முடிவில் பெருந்திரளான மக்கள் வந்து பூதவுடலுக்கு வாசனைத் திரவம் தெளித்து அஞ்சலித்தனர்.

பூதவுடல் பின்னர் மானிப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து திப்பிலி சேமக்காலை வரை மெமோரியல் பாடசாலைப் பிள்ளைகள் அணி வகுத்து நின்றனர். தோரணங்கள் இந்த வீதியை அழகு செய்தன.

அடக்க ஆராதனையைப் பேராயர் டி. ஜே. அம்பலவாணரும், வண. ஏ. ஜெயக்குமாரனும் நடத்தினார்கள். 1974 ல் காலமான அவரின் அருமைத் துணைவியார் மதுரம்மா குலேந்திரனின் சமாதியருகே அமைக்கப்பட்டிருந்த கல்லறைக்குள் பூதவுடல் மெதுவாக இறக்கப்பட்டது. கண்ணீர் மல்க அன்பர்கள் பாடினார்கள்.

''ஆனந்தமாம் செட்டை விரித்துப்—பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப்போயினும்
வானமண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at Arnold's International Printing House (Pvt) Ltd.
169/1, Union Place Colombo 2. ☎ 20485

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org